விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 01 சனிக்கிழமை (13.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 56

ராம்கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

## ஜே.வி.பியினர் கைதாவதை தடுக்க விசேட ஆலோசனை

(கொழும்பு)

ஜே.வி.பியின் முக்கிய உறுப்பினர்கள் சிலரை கைது செய்ய அரசாங்கம் திட்டமிட்டு வருவதால் அதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கட்சியின் சட்டத்தரணிகளுடன் உத்தியோகபூர்வமற்ற கலந்துரையாடல் ஒன்றை அக் கட்சி நேற்று மேற்கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கம், கட்சியின் உறுப்பினர்கள் சிலரைக் கைது செய்ய முயற்சிக்குமானால் எத்தகைய சட்ட நடவடிக்கைகள் எடுப்பது என்பது தொடர்பிலேயே நேற்றைய சந்திப்பில் கலந்துரை (16 ஆம் பக்கம் பார்க்க)

### பொன்சேகாவை விடுதலை செய்ய

## ஜனாதிபதி மகிந்தவைச் சந்தித்து ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுவிக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

இச் சந்திப்பு நேற்றுக் காலை அலரிமாளிகையில் இடம்பெற்றது. இச் சந்திப்புத் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ (16 ஆம் பக்கம் பார்க்க)

### அனோமா தாக்கல் செய்த மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது

# நாடாளுமன்றத் தேர்தலில் பொன்சேகா போட்டியிடலாம்

### உயர் நீதிமன்றம் நேற்று அரசுக்கு உத்தரவு

(கொழும்பு)

இராணுவத்தின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக் கோரி அவரது மனைவி அனோமா பொன்சேகாவும் மற்றும் சட்டத்தரணியும் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டு நிலைமை நல்லதல்ல; மகாநாயக்கர்கள் மாநாடு

(கொழும்பு)

நாட்டில் ஜனநாயக நல்லாட்சியை நிலைநாட்டும் நோக்கில் மாநாயக்க தேரர்கள் கண்டியில் விசேட மாநாடு ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் 18 ஆம் திகதி வரலாற்று சிறப்புமிக்க கண்டி மகா ஒலுவவில் இந்த விசேட மாநாயக்கர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகியிருப்பதாகப் பௌத்த பிக்குகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், உடுகம ஸ்ரீ புத்தர கித்த தேரர், வேவல்தெனியே மேதாலங்கார, (16 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகள் கூட்டணிக்குள் முரண்பாடு?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தில் போட்டியிடுவதாக எடுத்த முடிபால் எதிர்க் கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்குள் முரண்பாடான நிலைப்பாட்டை தோற்றுவித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி சின்னத்தை அறிவிக்கும் முன்னர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் குழுவினர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் நடந்த போர்க் குற்றத்தை விசாரிக்க தொடர்ந்தும் வலியுறுத்துவேன்

### ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டு இலங்கையில் நடந்த போரில் இறுதிக் கட்டங்களில் நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் என்று கருதப்படக் கூடிய விடயங்கள் குறித்து சர்வதேச விசாரணை தேவை என்பதைத் தாம் தொடர்ந்து வலியுறுத்தப் போவதாக ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

உலகில் பல்வேறு நாடுகளில் மனித உரிமைகள் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் செயற்பாட்டாளர்களுக்கான 5-வது மாநாடு அயர்லாந்து நாட்டின் தலைநகர் டப்ளினில் நடந்தது. (16 ஆம் பக்கம் பார்க்க)



## கருணா அரச விருதியில்! பொன்சேகா சிறையிலா?

### தென்பகுதியில் களைகட்டும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா சட்ட ரீதியற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டித்தும் அவரை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும் நீதிமன்றத் தெருக்களில் சட்டத்தரணிகள் நேற்று ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியுள்ளனர்.

இதேவேளை ஹொரணவிலும் ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக் கோரி பொது (16 ஆம் பக்கம் பார்க்க)



ஸ்ரீகந்தசுவாமி கோவில், உசன்–மிருசுவில்

திரவிய அபிஷேக ஸ்கந்த ஹோம மஹாயக்ஞம்

ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் தேவஸ்தான
'அருள்வாக்குச் சித்தர்' குகஸ்ரீ இரத்தினகேதீஸ்வர சுவாமிகள்
தலைமையில் பல சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.
அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
(காலை 7.00 மணிக்கு பஸ் போக்குவரத்து உண்டு)

-ஆலய தர்மகர்த்தா

(C-4428)

14.02.2010 ஞாயிற்றுக்கிழமை

விளம்பர அனுசரணை:
திருமுருகன் கொம்நெற்
259, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொன்சேகாவுக்கு மருத்துவ உதவி இராணுவத் தளபதி சம்மதம்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மருத்துவ உதவிக்கு இராணுவ வைத்தியசாலையில் இருந்து மருத்துவக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் எனக் கோரி அவரது மனைவி விடுத்த வேண்டுகோளுக்கு இராணுவத் தளபதி சாதகமான பதிலளித்துள்ளார்.

இதன்படி தடுத்து வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவின் அவசர மருத்துவ உதவிகளுக்காக இராணுவ வைத்தியசாலையில் இருந்து மருத்துவக் குழு ஒன்றை அனுப்ப தாம் உடன்படுவதாக இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இராணுவ வைத்தியசாலையின் மருத்துவ ஆலோசகர் மேஜர் ஜெனரல் எஸ்.எச்.முனசிங்கவை, தமது கடமைக்கு மேலதிகமாக சரத் பொன்சேகாவோ அல்லது அவரது மனைவியோ கோரினால் மருத்துவ உதவியை வழங்குமாறு இராணுவத் தளபதி பணித்துள்ளார். (ந-5)



யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் ஹப்ரால், யாழ்.ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையை சந்தித்து யாழ்.நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்த போது...

## கணவனின் கத்திக்குத்தில் மனைவி பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

குடும்பத் தகராறு காரணமாக கணவனின் கத்திக்குத்துக்கிலக்கான மனைவி உயிரிழந்தார். இச் சம்பவம் நேற்று மதியம் கிளிநொச்சியிலுள்ள உதயநகர் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, குடும்பத்தில் ஏற்பட்டு வந்த பிரச்சினை காரணமாக ஆத்திரமடைந்த கணவன், மனைவியின் மீது சரமாரியாக கத்தியால் குத்தியதாகவும், முதுகுப் புறமாக பலத்த கத்திக் குத்துக்கிலக்கான எஸ்.அமிர்த கௌரி (65) சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-30)

## கிளி., முல்லை மறை முதல்வர்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக் கோட்ட முதல்வராக அருட்தந்தை ஏ.ஜே.ஜாவிஸ் அடிகளாரை யாழ்.மறை மாவட்ட ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நியமித்துள்ளார்.

அத்துடன் அருட்தந்தை ஏ.ஜே. ஜாவிஸ் அடிகளாரே கிளிநொச்சி கியூடெக்- ஹரித்தாஸ் நிறுவன இயக்குநராகவும் கடமையாற்றுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சமூகசேவையாளர் மாணிக்கம் சுப்பிரமணியத்தின் சேவை நலன் பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 3.30மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல்வெளியீடு, விழா நாயகருக்கு பட்டம் வழங்குதல் என்பன நடைபெறவுள்ளன. (ந-14)

## தட்டு தலையில் பட்டு மாணவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுப் போட்டிக்காக தட்டெறிதல் பயிற்சியில் ஈடுபட்ட மாணவனை தட்டு பதம்பார்த்ததில் தலையில் படுகாயமடைந்தார்.

நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற தட்டெறிதல் பயிற்சியில் ஈடுபட்ட அரியாலையைச் சேர்ந்த ஜெ.நிசாந் (வயது-13) என்ற மாணவரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-30)

## கல்வியியல் கல்லூரி இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இரண்டு வருட வதிவிடப்பயிற்சியை முடித்துக் கொண்டு பாடசாலைகளில் உள்ளகப் பயிற்சிக்காக இணைந்து கொண்டுள்ள 9ஆம் அணியினருக்கான கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான கற்கை விடுமுறை 15.02.2010 திகதி தொடக்கம் ஆரம்பமாகின்றது என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். மேலதிக தகவல்களை கல்லூரியில் பெற்றுக்கொள்ள முடியும். (ந)

## குப்பி விளக்கு சரிந்தது பெண் எரிகாயம்

குப்பி விளக்கு சரிந்து வீழ்ந்ததில் பெண் ஒருவர் எரிகாயங்களுக்கிலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த ஸ்ரீ.துஸ்யந்தி (வயது 24) என்பவரே காயங்களுக்குள்ளானார். (ந-30)

**S.L.A.S இறுதிக்கருத்தரங்கு**

அடுத்த சனி, ஞாயிறு பரீட்சை நடைபெற உள்ளது.
வகுப்பு ஆரம்பம்:-
இன்று சனி 1.30மணி
★ சனி, ஞாயிறு 1.30-5.30 வரை, ஏனைய நேரங்கள் வகுப்பில் தீர்மானிக்கப்படும்.

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே.
(420)

## அமெ.-நோர்வே விடுத்த மறுப்பை அரசு ஏற்றுக் கொள்கிறது

### -அமைச்சர் போகொல்லாகம

(கொழும்பு)

நோர்வே மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு தேர்தல் காலத்தில் ஆதரவளித்ததாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை,

என குறித்த இரண்டு நாடுகளும் விடுத்த நிராகரிப்பு அறிக்கைகளை ஏற்றுக்கொள்வதாக வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகம தெரிவித்துள்ளார்.

இந்த மறுப்பு அறிவிப்பினை இலங்கை ஏற்றுக் கொள்வதாகவும் குற்றச்சாட்டுக்களை தொடர்ந்தும் சுமத்தப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரசார பணிகளுக்கு அமெரிக்கா மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் பணம் வழங்கியதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சிங்கப்பூர் ஊடகமொன்றுக்கு செவ்வியளித்திருந்தார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டினை அமெரிக்கா மற்றும் நோர்வே ஆகிய இரண்டு நாடுகளுமே மறுத்துள்ளன.

இதேவேளை சரத் பொன்சேகா சட்ட விதிகளுக்கு அமைவான முறையில் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அமைச்சர் போகொல்லாகம தெளிவுபடுத்தியுள்ளார். (ந-5)

**கணினி திருத்தம், விற்பனை**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.

குறைந்த விலையில் கணினிகள் விற்பனைக்கு உண்டு. உடன் அழையுங்கள். 077 1329513

(419)

10வது ஆண்டு நிறைவையொட்டி
NET BROWSING
SLT 1Hour 50/=
Dialog 1Hour 40/=
இந்தியா 1 நிமிடம் 3/=
நெற் போன் 1 நிமிடம் 1.50
(30 நிமிடத்திற்கு மேல் உரையாடுபவர்களுக்கு)
சேவை 6.00 am to 10.00 pm
கணபதி நெற்......
320. பலாலிவீதி. ஆலடிச்சந்தி.
(417)

NORTH LANKA IIT உடன் Direct Lines (Pvt) Ltd இணைந்து வழங்கும்
Netherlands (Holland) இல்
உடனடி வேலைவாய்ப்பிற்கான
Spot Selection
பின்வரும் வேலைவாய்ப்புகளுக்கு
130 வெற்றிடங்கள் ...............
↗ Security Supervisors
↗ Security Guards
↗ Factory Workers
↗ Industrial Workers
↗ Garden Workers
சம்பளம்
மாதம் 1200 யூரோ
- (ரூபா 2 இலட்சம்)
5 Years
Work Permit +Visa
இ தங்குமிட வசதி
ல மருத்துவ காப்புறுதி
வ போக்குவரத்து வசதி
ச
யாழ் வருகைதரவுள்ள
Member of JISCO group
Mr.Ahamed Jiffrey
Chairmen - Direct Lines (Pvt) Ltd
Labor License No - 524
அவர்களால் 14/02/2010 - 10:00 AM
Spot Selection ..........
பதிவு செய்பவர்களுக்கு மட்டும்
13-02-2010 - மாலை 4:00 மணிக்கு முன்பு
கீழ் வரும் முகவரியில் பதிவு செய்யவும்
NORTH LANKA IIT
#113, Laxan Plaza, Navalar Road, Jaffna.
(C-4427)

Computer Express
Institute of Information Technology
மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்கும்,
ஊழியர்களுக்கும் தொழில்சார்
கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன...
Duration:- 1week
Diploma in Film Technology & Video Editing
Adobe Photoshop
Cool 3D Studio
VCD Cutter
Capturing
Pinnacle Studio
Adobe Premiere
Internet & e mail
Diploma in Hard ware Engineering & Net working
System Configuration, Hardware Devices
Assembling, Repairing, Trouble Shooting
Installation of Hardware & Software, Project Works
Internet & e mail
Diploma in Graphic Designing & Adverdisement Marketing
Photoshop ,Macromedia Flash
Corel Draw, Cool 3d Studio
Internet & e mail
உறுதியானதும் ஸ்திரமுள்ளதுமான எதிர்காலத்தை வளமாக்கிக்கொள்ள இன்றே எம்நிறுவனத்துடன் இணைந்து மேற்காணும் கற்கை நெறிகளை கற்றுக்கொள்ளுங்கள்.
No 167, Kasthuriyar Road, Jaffna.
T.P-021 2228250
வகுப்புக்கள் ஆரம்பம்
15/02/2010 - 9AM
(C-4434)

யாழ். மண்ணில் புதிய உதயம்
P. K. S. P
ரயர் வேக் சொப் and விற்பனை நிலையம்



எம்மிடம் சகலவிதமான ரயர், ரீயூப், லஸ் ரயர், ரீயூப் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களையும் மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
மற்றும் சகல விதமான ரீயூப், ரீயூப் லஸ் ஓட்டு வேலைகளும் வீல் பலன்ஸ் வேலையும் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
தொலைபேசி:- 0214921802
0777498793
காலிங்கன் தியேட்டர் முன்பாக
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.
(C-4436)

# இன்று ஒரு தகவல்

## தாய்ப்பாசம்

நீண்டகாலத்திற்கு முன்னர் நடந்த உண்மை நிகழ்ச்சி இது.

அவர் ஒரு நீதிபதி. சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி.

ஒருநாள் மாலை...

வேலை முடிந்து வீட்டுக்கு வராமல் நண்பர்களுடன் சேர்ந்து பொழுது போக்கினார்.

இரவு ரொம்ப நேரம் கழித்து வீடு திரும்பினார்.

வீட்டில் வயதான தாயார் இவரை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்.

மகன் இன்னும் வந்து சேரவில்லை என்ற கவலை அவருக்கு. ரொம்ப நேரம் கழித்து மகன் வீட்டுக்கு வந்து மெதுவாக படியேறினார்.

தாயார் என்ன செய்தார் தெரியுமா?

பளாரென்று ஓங்கி மகனுடைய கன்னத்தில் அறைந்தார்.

ஏன் இவ்வளவு நேரம்? என்று கேட்டுக் கொண்டே அறைந்தார்.

மகனுடைய கண்களில் கண்ணீர்!

வயதான படித்த நீதிபதியொருவர் கன்னத்தில் அறைவாங்குவது எவ்வளவு அவமானம்!

அதற்காகத் தான் அழுதாரா?

அப்படி இல்லையாம்!

அவர் என்ன சொன்னார் தெரியுமா?

"நான் இப்படி அடிக்கடி என் அம்மாவிடம் அடிவாங்குவேன்.

அப்பொழுதெல்லாம் அடி பலமாக விழும்.

இன்றைக்கு அம்மா அடித்தார்.

வலிக்கவேயில்லை.

அம்மாவுக்கு பலம் குறைந்து விட்டதே... வயதாகி விட்டதே... என்பதை நினைக்க அழுகை வந்து விட்டது அழுதேன்" என்றாராம்.

எப்படி இருக்கிறது பாருங்கள் தாய்ப்பாசம். இந்த உண்மை நிகழ்ச்சியைச் காகா கலேல்கர் என்பவர் மகாத்மா,காந்தியிடம் சொன்னாராம்.

இன்னொரு நிகழ்ச்சி. அம்மாவுக்கு தாகம் ஏற்பட்டுவிட்டது.

மகனிடம் குடிக்கத் தண்ணீர் கொண்டு வரும்படி சொன்னார்.

சொல்லி விட்டுத் தூங்கிவிட்டார். மகனும் ஓடிப்போய் ஒரு குவளையில் தண்ணீரை எடுத்துக் கொண்டு வந்தார்.

அம்மா தூங்கிக் கொண்டிருந்தார்.

எழுப்பினால் தூக்கம் கெட்டு விடுமே என்று நினைத்து விழிக்கும் மட்டும் கையில் தண்ணீர்க் குவளையுடன் அங்கே நின்று கொண்டிருந்தாராம்.

நீண்ட நேரம் ஆகிவிட்டது. திடீரென்று ஒரு கட்டத்தில் அந்த அம்மா விழித்துப் பார்க்கிறார்.

மகன் எதிரே நின்று கொண்டிருந்தார்.

"மகனே! இவ்வளவு நேரமும் இங்கேயா நின்று கொண்டிருக்கிறாய்?" என்று எழுந்து மகனைக் கட்டியணைத்தார்.

தலையில் கையை வைத்து வாழ்த்தினார்.

என் மகன் பெரிய அறிஞராக வரவேண்டும் என்று வாழ்த்தினார்.

அந்த வேண்டுதல் வீண்போகவில்லை.

அந்த மகன் வளர்ந்து பேரறிஞரானார்.

கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார்.

வாழ்நாள் முழுவதும் உழைத்தார். மனிதர்களை நல்லவர்களாக்கப் பாடுபட்டார்.

அவர் தான் ஷர்புதீன் எஹ்யா.

பெரியவர்கள் எல்லோரும் தம் தாயாரை எப்படி மதித்தார்கள் என்பதை இந்த நிகழ்ச்சிகளிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். எவ்வளவு வயதானாலும் தாய்க்குப் பிள்ளைதானே!

ஒரு தாய் தன் மகனைப் படுக்கையிலிருந்து எழுப்பினார்.

"மகனே! எழுந்திரு. கல்லூரிக்கு நேரமாச்சு"

"எனக்கு காலேஜுக்குப் போகவே பிடிக்கலேம்மா"

"ஏன் பிடிக்கவில்லை? அதற்கு இரண்டு காரணம் சொல்லு"

"முதல் காரணம் அங்கேயிருக்கிற ஆசிரியர்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை. இரண்டாவது காரணம் மாணவர்களுக்கும் என்னைப் பிடிக்கவில்லை"

"அதற்காக கல்லூரிக்குப் போகாமல் இருக்கக் கூடாது. எழுந்திரு!"

"நான் எதற்காகப் போக வேண்டும். அதற்கு நீ இரண்டு காரணம் சொல்லு"தாய் சொன்னார்:

"முதல் காரணம் – உனக்கு வயது 52.

இரண்டாவது காரணம் – நீதான் பிறின்சிப்பல்"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் —கட்டுமானப் பணிகள் ஆரம்பம்—

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் பாடசாலைகள் அபிவிருத்தி அலகின் 2009 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளில் கட்டுமானபணிகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய ஊரெழு கணேசா வித்தியாலயம், மாதனை மெதடிஸ்தமிஷன் த.க பாடசாலை, நெடுந்தீவு மாவலித்துறை றோ.க வித்தியாலயம், மண்டைதீவு மகா வித்தியாலயம் ,நவாலி ஸ்தான அ.மி.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தலா 2 இலட்சம் ரூபா செலவில் இரு அலகு மலசல கூடம் அமைப்பதற்கும் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம், சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்,கட்டுடை சைவ வித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி ,நாவற்குழி மகாவித்தியாலயம்,அராலி வடக்கு அ.மி.த.க. பாடசாலை,போக்கட்டி அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தலா 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் குழாய் கிணறு மோட்டார் அறை அமைப்பதற்கும் , பாசையூர் அந்தோனியார் பாடசாலை, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், அராலி வடக்கு அ.த.க. பாடசாலை, தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றில் முறையே ரூபா 3 இலட்சத்து 50 ஆயிரம், ரூபா 5 இலட்சம், ரூபா 2 இலட்சத்து 75 ஆயிரம் ,1 இலட்சம் ரூபா செலவில் கட்டடத் திருத்த வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட செயலக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் அபிவிருத்தி உதவியாளர் தெரிவித்துள்ளார். (4-6)

## வீதி ஓட்டம் சைக்கிள் ஓட்டம்

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியின் முன்னோடி நிகழ்வாக நாளை ஞாயிற்றுக்கிழமை மாணவர்களுக்கு வீதி ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகியன காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான எட்டு கிலோ மீற்றர் நீளமுடைய வீதி ஓட்டம் பெண்களுக்கான ஐந்து கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டம் நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (2-4)

## கணித பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலயத்திற்குட்பட்ட கணித பாட ஆசிரியர்களுக்கான கணித பயிற்சி முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஊரெழு கணேசா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ் வலய கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (2-ப)

## இராசி பலன்

*13-2-2010 (மாசி 1, சனிக்கிழமை)*
*அமாவாசை முழுவதும்*
*திருவோணம் பிற்பகல் 4.43 மணிவரை*
*இராகுகாலம் 9.34-11.04 மணிவரை*
*சுபநேரம் 3.34-5.04 மணிவரை*
*கீரிமலை நகுலேஸ்வரர் தீர்த்தம், துன்னாலைகோயிற்கடவைப்பிள்ளையார் தேர்.*
*அமாவாசை விரதம்.*

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், பெரியோர் உதவி, போசன சுகம், உடல் நலம். |
| இடபம் | அதிக பிரயாசை, திடீர் பயணம், கட்டுப்பாடு, ஆரோக்கியக் குறைவு. |
| மிதுனம் | எதிர்பாராத பகை, வாகன பயம், காரியத்தடங்கல், ஆரோக்கியக் குறைவு. |
| கடகம் | குடும்ப மகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், திடீர் பயணம். |
| சிங்கம் | பண வருவாய், சத்துரு ஜெயம், காரிய அனுகூலம், ஜனவசியம். |
| கன்னி | குடும்பக் கவலை, காரிய சிந்தை, பணக்குறைவு, போசன சுகம். |
| துலாம் | பயந்த சுபாவம், ஆரோக்கியக் குறைவு, காரிய தாமதம், சுப செலவு. |
| விருச்சிகம் | இனியசம்பவம், வாக்கு மேன்மை , தேகநலன், உறவினர் உதவி . |
| தனுசு | கடின முயற்சி, தன லாபம், விவாதம், உறவினர் சந்திப்பு. |
| மகரம் | புதிய பொருள் சேர்க்கை, போசன சுகம், நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| கும்பம் | பிதா சிந்தை, உணர்ச்சி வசப்படல், பிரயாணம், சுப செலவு. |
| மீனம் | தெய்வ சிந்தை, குடும்ப மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, போசன சுகம். |

வளவன்

# மெய்வல்லுநர் போட்டி

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் மா. ஸ்ரீஸ்கந்தகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற பிரதி அதிபர் வே. வில்லவராயர் கலந்து கொள்ளவுள்ளார். (2-4)

## சிறந்த தொண்டர்களுக்கான காப்புறுதி நடவடிக்கை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்டக்கிளை பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கிவரும் செஞ்சிலுவைச் சங்க பிரிவுக் கிளைகளில் சிறந்த தொண்டர் சேவையைச் செய்து வரும் தொண்டர்களை காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான நிதி உதவியை கனேடிய செஞ்சிலுவைச் சங்கம் வழங்குவுள்ளதாக தெரியவருகிறது.(134)

# "நீரிழிவை வெற்றி கொள்வோம்" விழிப்புணர்வு விழாவும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையம்,யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்துடனும் யாழ். பொது வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்துடனும் இணைந்து நடத்தும் "நீரிழிவை வெற்றி கொள்வோம்."என்னும்விடயம்பற்றிய விழிப்புணர்வு விழாவும் கண்காட்சியும் எதிர்வரும் 21 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 27 ஆம் திகதி வரை காலை 8.30 மணி முதல் மாலை 7.30 மணிவரை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நீரிழிவு, குருதிப் பரிசோதனையும் நீரிழிவு உள்ளவர்களை ஆரம்ப நிலையில் கண்டறிதலும், நீரிழிவு நோயாளர்களுக்கான உணவு முறைகள், விசேட உடற்பயிற்சி முறைகள் சம்பந்தமான விளக்கங்கள், சுகாதாரம் தொடர்பான கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது.

மேலும் சுக வாழ்வுக்கான குறுந்திரைப்படங்கள், விசேட தனிப்பட்ட மருத்துவ ஆலோசனைகள், குழுநிலைக் கலந்துரையாடல்கள், நீரிழிவு தொடர்பான நூல் வெளியீடு, உயர்தர மாணவர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் கல்விசார் அறிவுறுத்தல்கள், மன அழுத்தத்திற்கான பரிகாரங்களும் யோக பயிற்சி முறைகளும் சலரோகம், சுகாதாரம் சம்பந்தமான நூல், இறுவட்டு (CD) விற்பனை மற்றும் பிரதேசங்கள் தோறும் நீரிழிவு விழிப்புணர்வு குழுக்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் என்பன இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (4-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 150 | 170 | 140 |
| தக்காளி | 100 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 50 |
| கரட் | 80 | 100 | 100 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 80 | 90 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 90 | 50 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 110 | 120 | 120 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 60 | 70 | 70 |
| கறிமிளகாய் | 200 | 220 | 160 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 400 |
| போஞ்சி | 120 | 120 | 110 |
| கத்தரி தம்புள்ள | 30 | 40 | 40 |
| கீரை – 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 35 | 30 |

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுப் பட்டமளிப்பு -மார்ச் 2010

கலாநிதி, முதுமாணி, பட்டப்பின் டிப்ளோமா, இளமாணி, டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 2010 மார்ச் 26,27,28 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் 29.08.2007 ஆம் திகதிக்கு பின்பும் 01.07.2009 ஆம் திகதிக்கு முன்பும் சித்தியடைந்து பட்டங்கள் பெற தகுதியுடையவர்கள் 28.02.2010 க்கு முன்னர் தமது வேண்டுகோளை அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோரு கின்றேன்.

01. கலாநிதித் தேர்வு
02. முதுதத்துவமாணித் தேர்வு
03. கல்வியியல் முதுமாணித் தேர்வு
04. பிரதேச திட்டமிடல் முதுகலைமாணித் தேர்வு
05. குடித்தொகை அபிவிருத்தி முதுகலைமாணித் தேர்வு
06. அபிவிருத்தி கற்கை முதுகலைமாணித் தேர்வு
07. பண்பாட்டியல் முதுகலைமாணித் தேர்வு
08. பொது நிர்வாக முதுகலைமாணித் தேர்வு
09. தமிழ் முதுகலைமாணித் தேர்வு
10. சைவ சித்தாந்த முதுகலைமாணித் தேர்வு
11. பட்டப்பின் கல்வி டிப்ளோமா தேர்வு
12. பட்டப்பின் பொது நிர்வாக டிப்ளோமா தேர்வு
13. பட்டப்பின் நூலகவியல் டிப்ளோமா தேர்வு
14. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணித் தேர்வு
15. சித்த வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணித் தேர்வு
16. தொழில் நிர்வாகமாணித் தேர்வு
17. வணிகமாணித் தேர்வு
18. விவசாய விஞ்ஞானமாணித் தேர்வு
19. விஞ்ஞானமாணித் தேர்வு (பொது/ சிறப்பு)
20. கலைமாணித் தேர்வு (பொது / சிறப்பு)
21. நுண்கலைமாணி (இசை / நடனம் / சித்திரமும் வடிவமைப்பும்) தேர்வு
22. விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணித்தலும்) வவுனியா வளாகம்.
23. விங்ஞானமாணி (சுற்றாடல் விஞ்ஞானம்) வவுனியா வளாகம்.
24. தொழில் நிர்வாகமாணி (முகாமை கற்கைகள்) வவுனியா வளாகம்.
25. தொழில் நிர்வாகமாணி (கணக்கியலும் நிதியும்) வவுனியா வளாகம்.
26. விஞ்ஞான டிப்ளோமா தேர்வு ( 2 வருடம்)
27. உடற்கல்வி டிப்ளோமா தேர்வு (2 வருடம்)
28. மீன்பிடி விஞ்ஞான டிப்ளோமா தேர்வு (2 வருடம்)

### அறிவுறுத்தல்கள்

1. *வேண்டுகோள் படிவங்கள்*

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் மூலம் பிரதி செய்தோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2. *கட்டணங்கள்:*

| | |
|---|---|
| (அ) வேண்டுகோள் கட்டணம் | Rs.200.00 |
| (ஆ) சான்றிதழ் கட்டணம் | Rs.350.00 |
| (இ) பட்டதாரி மேலங்கிக் கட்டணம் | Rs. 50.00 |

குறிப்பு: பின்வருவோர் வேண்டுகோள் கட்டணமும், பட்டதாரி மேலங்கிக் கட்டணமும் செலுத்தவேண்டியதில்லை.

1. பட்டமளிப்பு வைபவத்திற்கு சமுகமளிக்காது பட்டச்சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள்.
2. ஒரு வருட அல்லது இரண்டு வருட கற்கைநெறியைப் பூர்த்திசெய்தவர்கள்

3. *கட்டணம் செலுத்தும் முறை*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் கணக்கு இல. 162-1-62-090501-3 இற்கு சேரக்கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தை செலுத்த வேண்டும். (வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்)

***பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி வேண்டுகோள் படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*** மேலதிகமான ஒரு போட்டோ பிரதியை உங்கள் தேவைக்கு வைத்துக்கொள்ளவும்.

4. *பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச் சீட்டும்:*

நேரடியாக சமூகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கு ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினர் நுழைவுச் சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக்கிளையில் வழங்கப்படும்.

5. *பல்கலைக்கழக நிலுவைக்ள்*

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ்விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

6. *வேண்டுகோள் படிவங்களை சமர்ப்பித்தல்*

பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் ***பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்து*** நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கீழ்க்காணும் முகவரிகளுக்கு 28.02.2010 க்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். (கடித உறையின் இடதுபக்க மூலையில் பட்டம் பெறும் கற்கைநெறியை குறிப்பிடவும்).

1) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்
உதவிப் பதிவாளர்,
அனுமதிகள் கிளை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

2) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்
சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தேர்வுகள்,
வவுனியா வளாகம்,
வவுனியா

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் திகதி : 28.02.2010.**

முடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.மேலதிக விபரங்களுக்கு உதவிப் பதிவாளர் / அனுமதிகள் (தொலைபேசி இல. 021 -222 6714) உடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**
**12.02.2010**

(C-4433)

# UNIVERSITY OF JAFFNA - SRI LANKA

## GENERAL CONVOCATION - MARCH 2010
## SUPPLICATION FORM

**Note**: In writing your name please ensure that spelling of the name confirms what appears in the Birth Certificate. If the Birth Certificate is in Tamil or Sinhala, please give the English spelling of your name as it appears in your Admission Form.

**Registration No:- ………..** **Index No:- …….......**

(1) Name in Full:-
**a. In English:**
.............................................................
**b. In Tamil:**
.............................................................
**c. In Sinhala:**
.............................................................

(2) Name of the Post Graduate Degree/ Degree/ Diploma to be conferred:
.............................................................

(3) Year of passing the above examination and **the effective date of the degree:**
.............................................................

(4) Whether the Post Graduate Degree/ Degree/ Diploma to be conferred **'In Person'** or **'in Absentia'** (Please tick as appropriate)

| | |
|---|---|
| In Person | |
| In Absentia | |

(5) Present Address: -
.............................................................
.............................................................

(6) Telephone No:- ……… E-mail ...............

(7) Postal Address:-
.............................................................
.............................................................

**(8) Particulars of payment made:-(Payment Receipt Attached)**

| | Total Fee | Date of payment |
|---|---|---|
| (a)Supplication Fee (Rs.200.00) | | |
| (b)Certificate Fee (Rs.350.00) | | |
| (c)Gown Fee (Rs.50.00) | | |

I hereby certify that the above information are correct and true to the best of my Knowledge.

Date:-……………… ..............................
Signature of Applicant

# தற்கொலை தீவிரவாதிகள் தாக்கியதில்
## பாகிஸ்தானில் 15பேர் பலி

பாகிஸ்தானில் ஆப்கான் எல்லையில் உள்ள வசிரீஸ்தான் பகுதி தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. அப்பகுதியை மீட்க பாகிஸ்தான் இராணுவம் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளது. அமெரிக்க இரா ணுவ உதவியுடன் தலிபான்கள் மீது ஆளில்லா விமானங்கள் மூலம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அங்கு பானனு என்ற இடத்தில் பொலிஸ் அதிகாரிகள் அலுவலக வளாகத்தில் தலிபான்கள் தற்கொலை படை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

ஒரு வாகனத்தில் வந்த தற்கொலை தீவிரவாதி தனது உடலில் கட்டி வந்த குண்டை வெடிக்க செய்தான். அதேநேரத்தில் நடந்து வந்த மற்றொரு தீவிரவாதியும் குண்டை வெடித்தான்.

இந்தத் தாக்குதலில் 15 பேர் பலியானார்கள். அவர்களில் 9 பேர் பொலிஸ் அதிகாரிகள். 6பேர் பொதுமக்கள்.

இச்சம்பவத்தில் 20க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். அவர்களில் மாவட்ட பொலிஸ் சூப்பிரண்டு இக்பால் மார்வாத்தின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

தற்கொலை தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(2-6)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும்

05

## கோணேசர் கல்வெட்டு சில ஆராய்ச்சிக்குறிப்புகள்

சென்றகாலத்து நிகழ்ச்சிகளையும், சமகால வழமைகளையும் அவற்றுக்கு அடிப்படையாக இருந்த வரலாறுகளையும் தொகுத்துக் கூறும் நூலாகவே கோணேசர் கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது. குளக்கோட்டன் காலம் முதலாகவுள்ள கோணேசர் கோயிலின் வரலாற்று அம்சங்கள் சிலவற்றையும் ஆலய சேவைகள் பற்றிய விபரங்களையும் அது வர்ணிக்கின்றது.

தானம், வரிப்பத்து, வன்னிபங்கள் முதலானோர் ஆலய சேவைகளுடன் தொடர்புற்றிருந்தமையால் சமுதாயப் பிரிவுகள் பற்றியும் அவற்றின் குடியேற்றங்கள் ஏற்பட்டமை பற்றியும் கூற வேண்டிய தேவை அதனை உருவாக்கினோருக்கு ஏற்படலாயிற்று. கைலாசபுராணம் குளக்கோட்டன், கஜபாகு மகாராசன் ஆகியோரின் திருப்பணிகளைப் பற்றி மட்டுமே கூறுகின்றது.

ஆனால், கோணே சர் கல்வெட்டு திருகோணமலைப் பிராந்தியத்தில் நிலைகொண்டிருந்த இந்து சமுதாயத்தின் பிரதான பிரிவுகளைப் பற்றியும் வன்னிபங்களின் ஆட்சி பற்றியும், கோணேசர் கோயிலின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் கூறுகின்றது. சாசன வழக்காறுகளையும் பிற ஆவணங்களையும் பின்னணியாகக் கொண்டு சமுதாய வரலாற்றினைக் குறிப்பிடத்தக்க அளவிலேயே ஆதாரபூர்வமாகக் கூறுகின்ற வேறெந்த நூலும் இலங்கையிலே தமிழ் மொழியில் எழுதப்படவில்லை.

கோணேசர் கல்வெட்டிலே இடம்பெறும் கதைகளை விரிவுபடுத்தி செய்யுள் நடையில் அமைத்துக்கூறும் இலக்கியமே திருகோணமலைப் புராணம் ஆகும். அப்புராணத்திலே " உரிய புராணத்தினுக்குப் பேர் யாதென வினவில்... அரிய புகழமைந்த திருகோணமலைப் புராணம் என அறியலாமே" என்று கூறப்படுகின்றமை நோக்கற்பாலது.

திரிகோணமலைப் புராணம் 20 படலங்ளகளையும் 1491 செய்யுட்களையும் கொண்டுள்ளது. அதன் ஆசிரியரின் பெயரும் அது எழுதப்பட்ட காலமும் நிர்ணயிக்கப்படவில்லை. மாசிலாமணி முத்துக்குமாரு என்பவரின் கையெழுத்திலுள்ள திரிகோணமலைப் புராணத்து ஏட்டுப் பிரதியொன்றைக் கண்டவர்களும் அதனைப் பற்றிக் கேட்டவர்களும் முத்துக்குமாரு என்பவரே நூலின் ஆசிரியர் என்ற கருத்து தோன்றி நிலைபெறுவதற்குக் காரணராயிருந்தனர்.

ஆயினும் இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்டவரான வண்ணை மாநகரம் பரத்துவாசி ஆ.சண்முகரத்தினையர் நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை என்று கூறியுள்ளமையுங் கவனித்தற்குரியது.

கைலாசபுராணம் என்ற நிலைமாறி, திரிகோணமலைப் புராணம் என்ற பெயர் தோன்றியமையும் சிந்தனைக்குரியதே. இந்த நிலை மாற்றத்திற்கு இரண்டிற்கும் இடைப்பட்டதான கோணேசர் கல்வெட்டே ஏதுவாகவிருந்தது. கோணேசர் கோயிலின் வ்ரலாற்றுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய இலக்கியமரபொன்று திருகோணமலைப் பிராந்திய மக்களின் வரலாறுகளையும் வழமைகளையும் உள்ளடக்கியதாக விரிவுபெற்று வளர்ச்சியுற்றமையினையே திரிகோணமலைப் புராணம் என்னும் பெயர் உணர்த்துகின்றது என்று கருதலாம்.

மச்சபுராணம், கயிலாசபுராணம் முற்காலத்தவர்கள் எழுதிவைத்த மரபுகள் முதலியவை இப் புராணத்துக்கு ஆதாரமாயிருந்தன என்பதை மேல்வரும் அதன் பாயிரச் செய்யுள் தெளிவுபடுத்துகின்றது.

மச்சபுராணக் கதையுங் கைலாய
புராணத்தின் வாய்மைதானும்
முச்சமம் போற்றிடுமறிஞர் முன்னுரைத்த
மரபுகளின் முறையுந் தூக்கி
மெச்சிய சீர்தென்கயிலைப் பெரியோர்கள்
கூறென மன்விதியினா ராய்ந்து
இச்சகத்திற் கோணவரைப் புராணமெனத்
தமிழ்பாவி னியம்ப லுற்றேன்.

தென் கயிலாமாகிய கோணேஸ்வரம், தம்பலகாமத்துக் கோனைநாதர் கோயில் ஆகிய இரண்டு கோயில்களின் வரலாற்றம்சங்கள் பற்றிய செய்திகளையும், கதைகளையும் தொகுத்து, இலக்கிய நயம் பொருந்திய வகையிலே கூறும் சால்புடைய நூலாகவே திரிகோணமலைப் புராணம் காணப்படுகின்றது.

அதிலே ஆதாரபூர்வமான வரலாற்றுச் செய்திகள் மருவித் தெளிவற்றும்,நாட்டார் பாங்கிலுள்ள கதைகள் மேலோங்கியும் அமைந்திருப்பதை அவதானிக்கமுடிகின்றது.

### 4. நூலின் ஆசிரியரும் அவரின் காலமும்

பாயிரத்திலே "சொல்லுற்ற சீர்குளக் கோட்டுமன் சொற்படி சொல்லெனவே... கல்வெட்ட பாட்டெனப் பாடினார்... சீர்கவி ராசவரோதய விற்பன்னனே" என வரும் தொடர்களின் மூலம் ஆசிரியர் இன்னாரென்பது நன்கு தெளிவாகின்றது. ஆயினும் கவிராசவரோதய விற்பன்னனே என்னும் வர்ணனை குறித்து சில ஐயப்பாடுகள் எழுகின்றன. கவிராசவரோதய (ன்) என்பது ஒருவனின் இயற்பெயராக அமைந்திருக்க முடியாது. அது பட்டப் பெயரையும் இயற்பெயரையும் சேர்த்துக் கூறும் மொழித் தொடராகவே கொள்ளத்தக்கது. அதனை

பேராசிரியர்
**சி.பத்மநாதன்**

1) கவி ஆகிய இராசவரோதயன்
2)கவிராசனாகிய வரோதயன்

என இருவகையாகப் பிரித்துக்கொள்ளலாம். இராசவரோதயன் என்பது நூலாசிரியரின் இயற்பெயர் எனவும் கவி என்பது அவரின் தகைமையைக் குறிக்கும் சிறப்புப் பெயர் எனவும் கொள்வதே பொருத்தமானதாகத் தோன்றுகின்றது.

கவிராசவரோதயன் என்பவராலே கோணேசர் கல்வெட்டுப் பாடப்பெற்றது என்று அதன் பாயிரச் செய்யுள் கூறுகின்றபொழுதும் நூலாசிரியரை கவிராசர் என்று குறிப்பிடுவது ஆராய்ச்சி முறைகள் அறிவியல் நெறிகளுக்கேற்ப விருத்தாகியுள்ள இந்நாட்களிலே வழமையாகிவிட்டது. (தொடரும்)

## இலங்கை சட்டத்தில் ஜனாதிபதிக்குள்ள சலுகை ஜனாதிபதி வேட்பாளருக்கு கிடைக்க வழியில்லை

### ஜீ.எல்.பீரிஸ்



(கொழும்பு)

இலங்கைஅரசியலமைப்புச் சட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியொருவருக்கு உள்ள சலுகை ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு கிடைக்க வழியில்லை என ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு அவர் தொடர்ந்தும் விளக்கமளிக்கையில்,

இராணுவச் சட்டத்தின் அடிப்படையிலேயே சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ளார். இச் சட்டங்களை மீறி நடக்க எவருக்கும் அதிகாரமில்லை.

1945 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பிரித்தானிய இராணுவச் சட்டமே இலங் கையில் அமுலில் உள்ளது. இந்த நாட்டில் மனித உரிமைகள் எப்போதும் பாதுகாக்கப் பட்டே வந்துள்ளன. அதற்கு இச்சட்டம் பெரிதும் உதவியுள்ளது. இச்சட்டத்தை மாற்றுவதற்கு எவருக்கும் அரசியல் செல்வாக்குச் செலுத்த முடியாது.எமது அரசியல் சாசனத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு விடேச சலுகை வழங்கப்பட்டுள்ளது. எவரும் அவரை நீதிமன்றத்துக்கு அழைக்க முடியாது.

அதேபோன்று இலங்கையில் செயற்படும் வெளிநாட்டுத் தூதுவர் ஒருவரையும் எவரும் நீதிமன்றத்துக்கு அழைக்கும் உரிமை இல்லை. இவர்கள் தவிர ஏனையோர் அனைவரும் இச் சட்டத்தின் முன் சமமானவர்களே.

எனினும் இராணுவச் சட்டத்தின் கீழ் கைது செய்யயப்பட்ட ஒருவர் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என உணர்ந்தால் அது பற்றி அவர் மேன்முறையீடு செய்யவும் சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (2-6)

## இந்த வருடத்தில் இதுவரை பதிவான டெங்கு நோயாளர் எண்ணிக்கை

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 200 ஆக உயர்வடைந்துள்ளது.

இவர்களில் யாழ் மாவட் டத்திலேயே அதிக எண்ணிக்கையிலானோர் பதிவாகியுள்ளதுடன் அம் மாவட்டத்தில் 941 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 638 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வரையான காலப்பகுதியில் கொழும்பு மாநகர சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் மாத்திரம் 845 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 634 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு கூறுகின்றது.


மேலும் வவுனியா மாவட்டத்திலும் 366 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## இலங்கையில் இவ்வாண்டில் 5.5 சதவீத பொருளாதார வளர்ச்சி

இலங்கையின் பொருளாதாரம் 2010 ஆம் ஆண்டில் 5.5 சதவீத வளர்ச்சியடையும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. உள்நாட்டில் கேள்வி அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதி இடைவெளி மாற்றம், அத்துடன் 25 வருட கால பயங்கரவாதம் முடிவுக்கு வந்துள்ளமை இந்த பொருளாதார வளர்ச்சிக்கு காரணமாக அமையும் எனவும் அது தெரிவித்துள்ளது.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி அத்துடன் உலகப் பொருளாதார நெருக்கடியில் ஏற்பட்ட நெகிழ்வுத் தன்மை என்பனவும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-6)





வல்வை சிவகுரு வித்தியாசாலையில் நடைபெற்ற கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி கல்வி வலய வணிகக் கல்வி ஆசிரிய ஆலோசகர் வி.பரராஜசிங்கம், அதிபர் ஆ.சிவநாதன் மற்றும் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் ஆகியோரால் அழைத்து வரப்படுவதையும், முதலாம் தர மாணவர்களுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## மனைவியின் தலையில் கல்லால் குத்திய கணவன்

மனைவியின் தலையில் கணவன் கல்லால் குத்தியதில் தலையில் படுகாயமடைந்த நிலையில் பெண் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காடு ஆனந்தபுரம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது குறித்த பெண்ணின் கணவனிற்கும் அப் பெண்ணிற்கும் இடையில் இடம்பெற்ற கருத்துமோதல் உச்சமடைந்த நிலையிலேயே கல்லினால் குத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (14-2)

# இந்தியா – பாக். பேசுவார்த்தைக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது

(இஸ்லாமாபாத்)

வெளியுறவு செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தையை எதிர் வரும் 25ஆம் திகதி நடத்தத் தயார் என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. இந்தியா – பாகிஸ்தான் இடையேயான இரு தரப்புப் பேச்சுவார்த்தை மும்பையில் நடந்த தாக்குதலுக்குப் பின் தடைப்பட்டது. இதையடுத்து மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடர பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்தது.

ஆனால் மும்பைத் தாக்குதல் பயங்கரவாதிகளுக்கு எதிராகவும் பாகிஸ்தானில் செயற்படும் பயங்கரவாத அமைப்புக்களுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுத்தால் மாத்திரமே பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கும் என இந்தியா அறிவித்தது.

ஆனால் தற்போது அந்த நிலையில் இருந்து இந்திய அரசு சற்று தளர்ந்துள்ளது. இந்தியா – பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை பெப்ரவரி 18 அல்லது 25ஆம் திகதி நடத்தலாம் என இந்திய வெளியுறவு செயலர் நிருபமா ராவ் பாகிஸ்தானிடம் முன்மொழிந்திருந்தார்.

இந்நிலையில் வெளியுறவு செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தையை எதிர்வரும் 25ஆம் திகதி நடத்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு ஷா முகமது குரேஷி விருப்பம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது; இந்தியா – பாகிஸ்தான் இடையேயான பேச்சுவார்த்தையை விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கின்றோம். எங்கு விடுபட்டதோ அங்கிருந்து பேச்சுவார்த்தையை மீண்டும் தொடர விரும்புகிறோம்.

குறிப்பிட்ட ஒரு பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசாமல் காஷ்மீர் பிரச்சினை உட்பட இரு நாடுகளுக்குமிடையேயான அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் பேச விரும்புகின்றோம் என்றார். மும்பைத் தாக்குதல் போல மற்றொரு சம்பவம் நடந்தால் பேச்சு என்பதே கிடையாது என்று முன்பு இந்தியா தெரிவித்த கருத்து பற்றி பேச மறுத்துவிட்ட அவர் மேலும் தன் நாட்டில் தினமும் நடக்கும் பயங்கரவாத சம்பவங்களை வைத்து இன்னாருடன் நான் பேச்சு மற்றவர்களிடம் பேச்சு இல்லை என்று எப்படி முடிவு செய்ய முடியாதோ அதேபோல இந்த விடயத்தையும் கருதுவதாக தெரிவித்தார்.

இதற்கிடையில் இந்த விவகாரம் தொடர்பாக நிருபர்களிடம் பேசிய பாகிஸ்தான் பிரதமர் கிலானி காஷ்மீர் பிரச்சினையை ஒதுக்கித்தள்ள இந்தியா முற்படுகிறது. உண்மையில் காஷ்மீர் பற்றி பேச இந்தியாவுக்கு விருப்பம் இல்லை. இருந்தாலும் வெளியுறவு செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தையில் காஷ்மீர் பிரச்சினையும் இடம்பெற வேண்டும் என்பதே எங்களின் விருப்பம் என்றார்.

கடந்த சில நாட்களாக தலிபான்கள், அல்கொய்தா களையெடுப்பில் பாகிஸ்தான் அதிக அக்கறை காட்டவேண்டும் என்று அமெரிக்கா ஏற்படுத்தி வரும் நிர்ப்பந்தம் அதிகரித்திருக்கிறது. தலிபான்களைக் கட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இந்தியாவின் பங்கு தேவை என்று அமெரிக்கா கருதுகிறது. இந்தியா – பாக். பேச்சுக்களில் நேரடியாகத் தலையிட விரும்பவில்லை என்றாலும் இப்பேச்சுக்கள் தொடர வேண்டும் என்று விரும்புகிறது.

அடுத்ததாக சார்க் நாடுகளின் கூட்டமும் நடைபெற இருப்பதால் அதற்கு முன் இப்பேச்சுக்கள் தொடர வேண்டும் என்ற அடிப்படையில் தற்போது திகதி நிர்ணயம் ஆகியுள்ளது. இதில் பெரிய அளவு கொள்கை முடிவுகள் வர வாய்ப்பில்லை என்ற கருத்து வெளியுறவுத் துறை விமர்சகர்கள் வட்டாரத்தில் பேசப்படுகிறது. மேலும் இந்திய பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி கூறுகையில்; ஏதோ ஒப்புக்காக பேச வேண்டும் என்று நினைத்தால் அதனால் பயன் வராது. பாகிஸ் தானில் உள்ள பயங்கரவாத கட்டமைப்புக்கள் ஒழிக்கப்படும் வரை பேச்சில் பலன் கிடைக்காது என்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## பத்திரிகை ஆசிரியருக்கு 21 வருட சிறைத் தண்டனை

துருக்கியில் தொடர்குற்றச் செயல்களில் ஈடுபட்ட பிகேகே கட்சியின் ஆதரவாளர்களுக்கு சார்பான செய்திகளை வெளியிட்ட குற்றச்சாட்டில் குர்திஷ் பத்திரிகையொன்றின் ஆசிரியர் ஒருவருக்கு 21 வருட சிறைத் தண்டனை விதித்து துருக்கிய நீதிமன்றமொன்று தீர்ப்பளித்துள்ளது.

ஒஸான் கிலின் என்ற இந்தப் பத்திரிகை ஆசிரியர் தனது பத்திரிகையின் 12 பதிப்புக்களில் பிகேகே கட்சி ஆதரவாளர்களின் செயற்பாடுகளை ஆதரித்து நியாயப்படுத்தும் விமர்சனங்களை வெளியிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

துருக்கி ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் பெறுவதற்கு முட்டுக்கடையாகவுள்ள விடயங்களில் அந்நாட்டில் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படாமையும் ஒரு காரணமாக விளங்குகிறது.

1994ஆம் ஆண்டிலிருந்து தியர்பாகிர் நகரிலிருந்து வெளிவரும் அஸாடியா வெலட் (தாய்நாட்டின் சுதந்திரம்) என்ற இந்தப் பத்திரிகையானது இதற்கு முன் 5 தடவைகள் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-6)




## ரஷ்யாவில் விலைவாசி உயர்வைக் கண்டித்து அந்நாட்டு அரசுக்கு எதிராகப் போராட்டம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் பொருட்களின் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதமர் விளாடிமிர் புடினுக்கு எதிராகப் போராட்டம் நடத்தவுள்ளதாக அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான கென்னடி சியூக்னோவ் கூறியதாவது; ர்ஷ்யாவில் பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்து எதிர்வரும் 23ஆம் திகதி மொஸ்கோவில் பேரணி நடத்தவுள்ளோம். அன்றைய தினம் ஆயுதப்படை தினம் என்பதால் தேசியளவில் விடுமுறைதினமாகும்.

எனவே பிரதமர் விளாடிமிர் புடினுக்கு எதிரான போராட்டத்தில் 25 ஆயிரம் பேர் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கின்றோம். நாட்டில் உற்பத்தி குறைந்து பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால் நிலைமை மோசமாக உள்ளது. தொழிலாளர்களின் சம்பளக் குறைப்பு மற்றும் பொருட்களின் விலை உயர்வு, நடுத்தர மக்களின் வாழ்க்கையை இன்னலுக்கு உள்ளாக்கி உள்ளது என்றார்.

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளால் 25 ஆயிரம் பேரை ஈர்க்க முடிந்தால் புடின் பதவியேற்ற கடந்த பத்தாண்டுகளில் ரஷ்யாவில் நடக்கும் மிகப் பெரிய பேரணி இதுவாகவே இருக்கும். கடந்த 2007ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவில் வேலை வாய்ப்புக்கள் குறைந்து வருகிறது. பல்வேறு தனியார் நிறுவனங்களும் தொழிலாளர்களுக்கான ஊதியங்களை குறைத்து விட்டன. இந்நிலையில் பொருட்களின் விலை உயர்வு நடுத்தர வகுப்பு மக்களை வாட்டுவதாலேயே கம்யூனிஸ்ட் கட்சி அரசுக்கு எதிரான போராட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளது. (2-6)

## இஸ்ரேலுக்கு ஈரான் எச்சரிக்கை


## இராணுவ நடவடிக்கை எடுத்தால் அதை எதிர்த்து போர் நடத்தப்படும்

இஸ்ரேல் இந்தப் பிராந்தியத்தில் ஏதேனும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டால் அதை எதிர்த்து நடவடிக்கை எடுப்போம். அதன்பிறகு இஸ்ரேல் என்ற நாடே இருக்காது என்று ஈரான் நாட்டு அதிபர் மக்மூத் அகமது நிஜாத் எச்சரித்தார்.

ஈரான் அதிபர், சிரியா அதிபர் பாஷா அல் ஆசாத்திடம் தொலைபேசியில் கலந்துரையாடினார். அப்போது அவர் கூறியதாவது;

2006 முதல் 2009ஆம் ஆண்டு காலகட்டங்களில் காசா மக்களிடமும் லெபனான் ஹிஸ்பொல்லா தீவிரவாதிகளிடமும் ஏற்பட்ட தோல்விக்கு எந்த வகையிலும் பழிவாங்கலாம் என்று இஸ்ரேல் ஆலோசித்து வருவதாக நம்பகமான தகவல் எனக்கு கிடைத்துள்ளது. இஸ்ரேல் மீண்டும் இராணுவ நடவடிக்கை எடுத்தால் அதை எதிர்த்து முழு அளவில் போர் நடத்தப்படவேண்டும். இந்தப் போர் மூலம் எதிரியை இல்லாமல் ஒழிக்கவேண்டும். இவ்வாறு அகமதுநிஜாத் கூறினார். (2-6)

## இரட்டைக்கோபுர வீழ்ச்சி திகில் படங்கள் வெளியீடு




அமெரிக்காவின் புகழ்பெற்ற இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட போது ஹெலிகாப் டரிலிருந்து அந்நாட்டுபொலிசார் அடுத்த அதிர்ச்சியூட்டும் படங்கள், சம்பவம் நடந்து ஒன்பது ஆண்டுகளுக்குப் பின் வெளியிடப் பட்டுள்ளன.

அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் என்று அறியப்பட்ட இரட்டைக் கோபுரங்கள் 2001 செப்ரெம்பர் 11 அன்று பயங்கரவாதிகளால் விமான மோதல் மூலம் இடித்துத் தகர்க்கப்பட்டன. இக்கொடூர சம்பவத்தில் இரண்டாயிரத்து 752 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் நிகழ்ந்தபோது அமெரிக்க பொலிசார் ஹெலிகாப்டரிலிருந்து பல படங்கள் எடுத்தனர்.

அப்படி எடுக்கப்பட்ட இரண்டாயிரத்து 799 படங்களுள் குறிப்பிட்ட படங்களை, அமெரிக்க செய்தி அமைப்புக்கு அந்நாட்டு தேசிய தர மற்றும் தொழில்நுட்ப அமைப்பு வழங்கியுள்ளது. ஹெலிகாப்டரில் இருந்து கொண்டு படம் எடுத்த வெளிப்புறச் செய்தியாளர்களிடமிருந்து இந்தப் படங்களை தொழில்நுட்ப அமைப்பு வாங்கியிருந்தது.

ஒரு படத்தில் கட்டடம் இடிந்ததால் ஏற்பட்ட புழுதி அலையலையாக மிதந்து வருவது காட்டப்பட்டிருக்கிறது. கட்டடம் படிப்படியாக இடிந்து அருகிலுள்ள பகுதிகளிலும், கிழக்கு நதியிலும் விழுவதும் எடுக்கப்பட்டுள்ளது. அக்கட்டடத்துக்குள் சிக்கியவர்களின் பரிதாபகரமாக வேதனையுடன் இருக்கும் முகங்களையும் எடுத்துக்காட்டுகின்றன. (2-6)



வரலாறு காணாத வகையில் அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு நிகழ்கின்றது. தலைநகர் வோஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகை வளாகம் முற்றிலும் பனிக்கட்டியால் சூழப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

## வங்கி வைப்புக்கள் தொடர்பான

## ஐரோப்பிய ஒன்றிய – அமெரிக்க உடன்படிக்கை நிராகரிப்பு

வங்கி வைப்புக்கள் தொடர்பான விபரங்களை ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்ள வழிவகை செய்யும் உடன்படிக்கை ஒன்றை ஐரோப்பிய நாடாளுமன்றம் நிராகரித்துள்ளது.

கணனி, தொலைபேசி போன்றவற்றின் வழியாக செய்யப்படும் சர்வதேச வங்கி வர்த்தக பரிமாற்றங்களைக் கையாளும் நிறுவனத்திடமிருந்து அந்த விபரங்களைப் பெற்று சர்வதேச பயங்கரவாத சந்தேக நபர்களின் பொருளாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்க அமெரிக்கா விரும்புகிறது.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் இந்த முடிவு, ஒப்பந்தத்தை உருவாக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய அரசுகளை மூக்குடையச் செய்திருப்பதாகச் செய்தியாளர்கள் கூறுகின் றனர்.

மேலும் இந்த முடிவினால் தான் அதிருப்தியடைவதாக பிரஸ்ஸல்ஸில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கூறியுள்ளது. (2-6)

## மாசிமக இலட்சார்ச்சனையும் 108 சங்காபிஷேகமும்

(கல்வயல்)

சாவகச்சேரி கல்வயல் கிராமத்தின் விளைவேலி தாளாயம்பதி துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மாசிமக இலட்சார்ச்சனை பெருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் மாசிமக தினமான எதிர்வரும் 28 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை 108 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து இலட்சார்ச்சனையும் இடம்பெறவுள்ளதாக தேவஸ்தான தர்மகர்த்தா ம.பரமேஸ்வரக் குருக்கள் தெரிவித்தார். (2-4-31)

## கோப்பாய் பொதுச் சந்தையை மீள இயக்குமாறு மக்கள் கோரிக்கை

வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள கோப்பாய் பொதுச் சந்தையை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் பிரதேச செயலருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இதற்கமைய நடவடிக்கை எடுக்குமாறு கோப்பாய் பிரதேச செயலர் சீ.மோகன்றாஸ் வலிகிழக்கு பிரதேச சபையின் செயலாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிகிறது. (2-ப-134)

## வாடி வீடு அமைப்பதற்கான திட்ட முன்மொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் சகல பிரதேசங்களிலும் வாடி வீடு ஒன்றினை அமைப்பதற்குரிய திட்ட முன்மொழிவு ஒன்று வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்களின் கோரிக்கைக்கிணங்க அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (30-2)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(அலவாய்)

பொலிகண்டி இ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வே.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் இ.விக்கினேஸ்வரமூர்த்தி கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக வடவலய முகாமைத்துவ உதவியாளர் சி. ஸ்ரீபாஸ்கரன் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (2-4-19)

✠✠✠

(அல்வாய்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை மாலை 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் பகுதித் தலைவர் ந.சர்வானந்தா கலந்து சிறப்பிப்பதுடன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி அம்பிகாதேவி சர்வானந்தா வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (2-4-19)

# நிவாரணத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச நிறுவனத்தின் கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

நிவாரணத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச நிறுவனம் தென்மராட்சிப் பாடசாலை மாணவர்களிடையே " யாழ்.குடாநாட்டில் மலத்தின் மூலம் பரவும் நோய் ஆபத்து" எனும் தலைப்பில் விழிப்புணர்வுக் கருத்தமர்வினை தொடராக நடத்தி வருகின்றனர்.

அவ்வகையில் டாக்டர் C. நாச்சினார்க்கினியன் தலைமையில் நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர் எம்.என்.எம்.றுஸ்ரி மற்றும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் க.இராசேந்திரம் ஆகியோர் கடந்த வாரம் திங்கட்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் பிரதேச பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் முதலாவது விரிவுரையையும் விழிப்புணர்வுக் கருத்தமர்வையும் நடத்தினர்.

அதில் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் மலக்கழிவை இயந்திரங்கள் மூலம் மாற்றீடு செய்து பசளை தயாரிக்கும் திட்டம் தமது நிறுவனத்தால் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளதாகவும், மலக்கழிவுகள் பல இடங்களில் கொட்டப்படுவதால் பல பாதிப்புகள் ஏற்படுவதாகவும் நிலத்தடி நீர் மாசடைந்து வரும் இந்நிலையில் அக்கழிவுகளை இயந்திரங்கள் மூலம் விவசாயத்துக்கு உபயோகிக்கப்படக் கூடிய பசளையாக மாற்றீடு செய்யும் இயந்திரம் ஒன்று ஒரு கோடி ரூபா செலவில் நிறுவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

மார்ச் முற்பகுதியில் இவ் இயந்திரம் மூலம் வேலைகளை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும் தென்மராட்சிப் பகுதியிலேயே பல இடங்களில் மலக்கழிவுகள் கொட்டப்படுகின்றன. இதனாலேயே இங்கு முதன்முதலாக எமது திட்டத்தை பரீட்சார்த்தமாக மேற்கொண்டுள்ளோம். இத் திட்டத்தினால் மலக்கழிவுகளால் ஏற்படும் அகச்சூழல் மற்றும் புறச்சூழலில் ஏற்படும் பாதிப்புக்கள் தவிர்க்கப்படுவதுடன் எவ்விதமான துர்நாற்றமோ, பார்வைக்கு அசிங்கமான பொருட்களோ வெளியேற்றப்படமாட்டாது என்பது விசேடமாக குறிப்பிடத்தக்கது என்றும் தெரிவித்தனர். (29-2)

## கவிதை போட்டியில் இரண்டாம் இடம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கிய மஹோற்சவத்தின் நிமிர்த்தம் கலாசார அலுவல்கள் திணைக்களமும் யாழ்.மாவட்ட அரச அதிபர் செயலகமும் இணைந்து அண்மையில் மாவட்ட மட்டத்தில் கலை இலக்கிய போட்டிகள் நடாத்தப்பட்டன.

இதில் கனிஷ்ட பிரிவில் நடைபெற்ற கவிதை எழுவதும் போட்டியில் இரண்டாம் இடத்தை வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவியான செல்வி அனிஸ்ரா தவராசா பெற்றுள்ளார். (2)

## கருத்தரங்கும் நூல் அறிமுகவிழாவும்

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி மத்திய நூல் நிலையத்தினால் நடத்தப்படும் விஞ்ஞான கருத்தரங்கும் ஜூனியன் நூல் அறிமுகவிழாவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பிரதேசசபை செயலாளர் எஸ்.சந்திரமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் பிரசாரக் குழு தலைவர் என்.பேராசிரியன் கலந்துகொண்டு விஞ்ஞான நூலான ஜூனியன் பற்றி அறிமுகவுரை நிகழ்த்தவுள்ளதுடன் பாடசாலை மாணவர்களிடையே விஞ்ஞான அறிவை மேம்படுத்தல் தொடர்பான கருத்துரைகளையும் வழங்கவுள்ளார். (4-35)

# கிளிநொச்சியில் மீண்டும் தனியார் பேரூந்து சேவை

(வடமராட்சி)

கிளிநொச்சியில் தனியார் பேரூந்து கழகம் தமது செயற்பாட்டை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கழகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை மறுதினம் கிளிநொச்சி அரச செயலகம் முன்பாக அலுவலகம் திறக்கப்படவுள்ளதென்றும் மேலும் முழுமையாக மீள்குடியேற்றம் செய்ததன் பின்னர் தனியார் பேரூந்து கழக பஸ் சேவைகள் விரிவாக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-10)




## செயன்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.(சா.த) சங்கீதம், நடனம், நாடக அரங்கியல் போன்ற பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 2 மணிக்கு யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.வலயத்திற்குள் உட்பட்ட அதிபர் மற்றும் பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (2-ப)

# அலரிவிதையினை உட்கொண்ட சிறுமிகள் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

அலரி விதையினை தேக்கங்காயின் விதை என நினைத்து உட்கொண்ட நான்கு சிறுமிகள் மயக்கமடைந்த நிலையில் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை பேபிபுரம் அச்சுவேலியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பி.நஸ்ணி (வயது -8), ரி. சயன்தா(வயது-5), கே.சுஜேந்தினி (வயது-6), எஸ்.தர்விகா (வயது -6) என்ற நான்கு சிறுமிகளுமே இவ்வாறு பாதிப்படைந்தவர்களாவர்.

மரங்கள் சூழ்ந்துள்ள பகுதிக்கு விளையாடுவதற்காக சென்றிருந்த சமயம் அவ்விடத்தில் காணப்பட்ட விதைகளை எடுத்து கல்லால் குற்றி உள்ளிருந்த பருப்புக்களை உட்கொண்ட பின்னர் சிறுமிகள் அவரவர் வீட்டிற்குச் சென்றபோது அதில் ஒரு சிறுமி மயக்க நிலையடைந்ததையடுத்து பெற்றோர்கள் ஏனைய சிறுமிகளை விசாரித்த போதே இச் சம்பவம் குறித்து தெரியவந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (3-30-ப)

# வணிக பாடக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 11,12,13 வகுப்புக்களில் வணிகக் கல்வியை ஒருபாடமாகக் கல்வி கற்கும் மாணவருக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இலங்கை பிள்ளைகள் பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய தரம் 12,13 மாணவருக்கு காலை 8.30 முதல் 12.30 மணிவரையும், தரம் 11 மாணவருக்கு நண்பகல் ஒரு மணி முதல் 2 மணிவரையும் என்ற நேர அட்டவணையின் படி நடைபெறும்.

எனவே மாணவர்கள் இக்கருத்தரங்குகளில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (2-ப)

# 'கணக்காய்வும் கூட்டுறவு அபிவிருத்தியும்' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் இளைப்பாறிய அதிபர் இ.சுப்பிரமணியத்தின் "கணக்காய்வும் கூட்டுறவு அபிவிருத்தியும்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் யாழ். உதவிப் பிராந்திய முகாமையாளர் சு.ஹென்றி கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்லைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா வழங்கவுள்ளார். அத்துடன் நூலின் முதற் பிரதியை வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் கல்விப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.கிருஸ்ணகுமார் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இரட்ணம் வழங்கவுள்ளார். (2-4-30)

# மண்டைதீவில் நெற்பயிர்ச் செய்கை தொடர்பான கலந்துரையாடல்

பயிர்ச் செய்கைக்கு உட்படாத நெற்காணிகளை பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தும் அரசாங்கத்தின் தேசிய திட்டத்தின் கீழ் மண்டைதீவில் கடந்த இரு தசாப்தங்களாக நெற்செய்கைக்கு உட்படாத வயல்களில் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய முன்றலில் நடாத்துவதற்கு வேலணைப் பிரதேச செயலாளரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் முக்கியமாக நெற்காணிச் சொந்தக்காரர்கள் நெற்பயிர் செய்கை மேற்கொள்ள விரும்புபவர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார். (2-6)



தற்காலிகமாக கிளிநொச்சியில் இயங்கிவந்த பச்சிலைப்பள்ளி பிரதேசசபையானது அண்மையில் பளையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் 671 ஆவது படைப் பிரிவின் இராணுவத்தலைமை அதிகாரி மங்கல விளக்கேற்றுவதையும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் எஸ்.முகுந்தன், கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.உமா ஆகியோர் உரையாற்றுவதையும், மேடையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் எஸ்.சிவப்பிரகாசம் உள்ளிட்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# அச்சமின்றி அனைவரும் ஒன்றுபட்டு ஜனநாயகத்தை காத்திடுவோம்

## தேசிய பிக்கு முன்னணி

(கொழும்பு)

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக கட்சி பேதங்களை மறந்து வீதியில் இறங்கிப் போராட சகல மக்களும் முன்வரவேண்டும் என அழைப்பு விடுக்கும் தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் தம்பர அமிலதேரர், நாளை ஞாயிற்றுக்கிழமை நாடு பூராகவுமுள்ள விகாரைகளில் விசேட பூஜைகளை நடத்தி போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரபாகரனால் தற்போது எமக்கு தொல்லையில்லை. ஆனால், மீண்டுமொரு புதிய பிரபாகரனுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையை மாற்றியமைத்து, ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக இரத்தம் சிந்தவும் உயிரையே தியாகம் செய்யவும் தயங்கமாட்டோம் எனவும் கூறினார்.

நேற்று முன்தினம் தேசிய நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

ஜெனரல் சரத்பொன்சேகா இந்த நாட்டு மக்கள் மனங்களில் நீங்காத இடம்பிடித்துள்ள வீரம்மிக்க இராணுவத்தளபதி. அவரை மோசமான விதத்தில் கைது செய்துள்ளனர். இதனை ஒருபோதும் இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

நாட்டை பயங்கரவாதப் பிடியிலிருந்து மீட்டெடுப்பதற்காக அளப்பரிய சேவையாற்றிய இராணுவ தளபதியொருவருக்கு எதிராக இவ்வாறு மோசமான நடவடிக்கைகளை எடுத்திருக்கக் கூடாது. அவர் பல தடவைகள் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்குள்ளான போதும் கூட தமது பணியை இடைநிறுத்தாமல் தீவிரமாக முன்னெடுத்துச் சென்றவர்.

முதலாம் விஜயபாகு மன்னுடைய காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட புத்தராஜ போன்ற வீரர்கள் எவ்வாறு கௌரவிக்கப்பட்டார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

எதிரிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்த படைத் தலைவனுக்கு கௌரவம் வழங்க வேண்டும். மாறாக, மோசமான நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடாது. நன்றியுள்ள எவரும் இதனை அனுமதிக்கமாட்டார்கள்.

உலகிலேயே சிறந்த இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாதான் என்று அன்று பாதுகாப்புச் செயலாளர் பாராட்டுக்களை கூறியிருந்தார். அது மாத்திரமில்லாமல் நாடுபூராகவும் அவருடைய கட் அவுட்கள், பதாகைகள் என்பன வைக்கப்பட்டு பால் சோறு உண்டு அவரை கௌரவித்தார்கள்.

அவ்வாறான ஒருவரையே இன்று பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி கைது செய்துள்ளனர்.

எதிர்க்கட்சிகளின் ஆதரவாளர்கள் மீதும் சொத்துக்கள் மீதும் தாக்குதல்களை நடத்தி வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டுள்ளார்கள்.

எனவே, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் உண்மையாக வெற்றியடைந்திருந்தால் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டிய அவசியமில்லை.

ஊடக நிறுவனங்களை 'சீல்' வைப்பதன் மூலமும் ஊடகவியலாளர்களை தாக்கி அச்சுறுத்துவதன் மூலமும் கருத்துச் சுதந்திரத்தையும் பறித்துள்ளனர். எனவே, இவ்வாறானவர்களிடமிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் மீட்டெடுத்து, ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும். அதற்காக அச்சமின்றி அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். (2-6)

# சுயதொழில் ஊக்குவிப்பிற்காக புதிய கிளைகள் திறக்கப்படவுள்ளன

## இலங்கை வங்கியின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சுயதொழிலை ஊக்குவிக்க புதிய கிளைகளைத் திறப்பதற்கு இலங்கை வங்கி நடவடிக்கை எடுத்து வருவதாக வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் எதிர்காலத்திட்டங்கள், இலக்குகள் குறித்து விளக்குமளிக்கும் செய்தியாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது கிளிநொச்சி, மல்லாகம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் ஏற்கனவே இயங்கிய கிளைகளை மீளத் திறப்பதுடன் புதிய கிளைகளையும் ஆரம்பிக்கவுள்ளோம். இன்றுவடக்கில் 30 கிளைகளும் கிழக்கில் 34 கிளைகளும் உள்ளன.

மேலும் 30 கிளைகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு 5 பில்லியன் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. ஐம்பதினாயிரம் முதல் இரண்டரை மில்லியன் வரை கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள், விவசாயிகள் உள்ளிட்ட தொழிற்துறையினருக்கு அவர்களின் தொழில் முயற்சியை மேம்படுத்த கடன் வழங்கப்பட்டுள்ளது. (2-6)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் பாடசாலை அதிபர் பா.வெற்றிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலை நலன் விரும்பி இ.வரதன் கலந்து சிறப்பிப்பதுடன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (4-19)

# பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சண்டிலிப்பாய் பிரிவில் புதிய கணனிப் பயிற்சி நெறி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக் கணனிப் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களை தவறாது சமுகமளிக்குமாறு சண்டிலிப்பாய் பிரிவு செஞ்சிலுவைச்சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (4)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் முகாமைத்துவ சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் கருத்தரங்குத் தொடரில் சுகாதார துறைவளர்ச்சியில் அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்பு என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணிமுதல் 7 மணிவரை பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எம்.சி.டபிள்யூ வீரசிங்க கருத்துரைகளை வழங் கவுள்ளார். (6-4)

# கணக்கெடுப்பு அறிக்கையை ஒப்படைத்தல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டத்திற்கு உட்பட்ட சகல பாடசாலைகளையும் 2009 ஆம் ஆண்டிற்கான களஞ்சியப் பொருட்களுக்கான கணக்கெடுப்பு அறிக்கையினை நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் கோட்டக் கல்விப் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா கேட்டுக்கொண்டுள்ளார். (2-ப)

# மண்கும்பானில் மீள்குடியேறும் முஸ்லிம் மக்கள்

வேலணை மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை பகுதியில் தற்போது 10க்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் மீள் குடியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மக்கள் தற்போது தறப்பாள் கூடாரத்திலேயே வசித்து வரும் அதே வேளை இப்பகுதியில் தனியார் வியாபார நிலையமோ அல்லது ப.நோ. கூட்டுறவு சங்க விற்பனை நிலையமோ இல்லாமையால் தமது தேவைக்குரிய பொருட்களை நீண்டதூரம் சென்று பெற்றுக்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# பேடன்பவல் தின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்க யாழ் மாவட்டக் கிளையினால் நடத்தப்படும் பேடன்பவல் தின போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சகல சாரணர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட சாரணர் ஆணையாளர் க. செபஸ்ரியாம்பிள்ளை கேட்டுள்ளார். (6-4)

# கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில்

## — பற்சிகிச்சை நிலையம் ஆரம்பம் —

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் நவீன உபகரண வசதிகள் கொண்ட பற்சிகிச்சை நிலையப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர். எஸ்.ஆறுமுகம் தலைமையில் பதில் பிராந்திய பல்வைத்திய அதிகாரி வி.ஆர்.டேவிட்டால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் பல் வைத்தியம் நடாத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரிவில் அமைந்துள்ள இரண்டாவது பற்சிகிச்சை நிலையம் இதுவாகும். (2-6)

# ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான முதலாம் தொகுதி இடமாற்றம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலைகளில் 7 வருடங்களிற்கு மேல் கடமையாற்றிய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான முதலாம் தொகுதி இடமாற்ற உத்தரவு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

67 ஆசிரியர்களுக்கான இவ் இடமாற்றம் தென்மராட்சி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்குள்ளேயே இடம்பெற்றுள்ளதெனவும் 55 வயதுடையோர் தவிர்ந்த ஏனையோரே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்தார். (2-29)

# மாசி மாதப் பலன்கள்

## மேடம்

**(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம்)**

வளர்ச்சிப் பாதையில் கவனத்தைச் செலுத்தும் மேட ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதக் கடைசியில்தான் செவ்வாய் வக்ர நிர்வத்தியாகிறார். அதேநேரத்தில் தனாதிபதி சுக்ரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதார விருத்தி அதிகரிக்கும். வருமானம் எதிர்பார்த்தைக் காட்டிலும் சிறப்பாக இருக்கும். ஆனால் ஆரோக்கியத்திற்காகவும், அடுத்தவர் நலன் கருதியும் அடிக்கடி செலவு செய்து கொண்டே இருப்பீர்கள். மன அமைதி குறையாமலிருக்க தினந்தோறும் தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

ஆலய வழிபாட்டை முறையாகச் செய்பவர்களுக்கு வாழ்வில் வரும் துயரங்கள் வாயிற்படியோடு நின்றுவிடும் என்பது நம்பிக்கை. சந்திர மங்கல யோகம் இருப்பதால் வீட்டு பராமரிப்புச் செலவுகளுக்காகவும் விருந்தினர்களுக்காகவும் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவதற்காகவும் ஒரு தொகையைச் செலவிட்டு மகிழ்வீர்கள்.

மாதக் கடைசியில் புதன் மீனத்தில் உலா வரும் நேரத்தில் விபரீத ராஜயோகம் செயற்படப் போகிறது. எனவே மார்ச் 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும்.

பெப்ரவரி 19ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 3, 6 இற்கு அதிபதி பதினொன்றில் சஞ்சரிக்கும் பொழுது உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். சண்டை, சச்சரவுகளுக்கு மூல காரணமாக இருந்தவர்கள் சரணடைவர். அண்டை வீட்டாருடன் இருந்த பகை மாறும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடு செய்வீர்கள். வழக்குகளில் வெற்றி கிட்டும். இல்லையேல் சமாதானப் போக்கில் செல்ல விரும்புபவர்களுக்குத் தனவரவு எதிர்பார்த்தபடி வந்து சேரும். கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். வட்டிக் கடைகளிலும் பெட்டிக்கடைகளிலும் வைத்த பாக்கிகளை எல்லாம் முற்றிலும் தீர்த்து முகமலர்ச்சியடைவீர்கள்.

மார்ச் மாதம் 3ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். தனாதிபதி 12இல் சஞ்சரிக்கும் பொழுது தனவரவு ஒரு புறம் வந்து கொண்டேயிருந்தாலும் விலை உயர்ந்த பொருட்களையும் வாங்கிச் சேர்க்கும் வாய்ப்பு வந்து சேரும். எனவே அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தில் பெண்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். தங்க நகை வாங்க வேண்டுமென்ற எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினைகள் சாதகமாக முடியும்.

மார்ச் 8ஆம் திகதி மீன ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 3, 6இற்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பாராத விதத்தில் வந்து இனிமை சேர்க்கும்.

இம்மாதம் இனிய மாதமாக அமைய அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அனுமன் வழிபாடு அல்லல்களைத் தீர்க்கும்.

## இடபம்

**(கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)**

உதவும் குணத்தால் அனைரின் உள்ளத்திலும் இடம்பிடிக்கும் இடப ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது எண்ணங்கள் அனைத்தும் எளிதில் நிறைவேறும் விதத்திலேயே அமைந்திருக்கின்றன. மாதத் தொடக்கத்திலேயே குரு, சுக்ர சேர்க்கை யோடு, சுகாதிபதி சூரியனும் இணைந்திருப்பதால் வாய்ப்புக்கள் வாயில் தேடி வந்து சேரும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்க நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்வர். ஆரோக்கியம் சீராக ஆனந்தப்படுத்தும்.

ஆன்மிகப் பயணங்கள் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். பஞ்சம ஸ்தானத்தில் சனி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகள் வழியில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. அவர்களுக்குரிய வாழ்க்கைப் பிரச்சினைகளை குறித்த நேரத்தில் முடித்து வைக்கா விட்டால் பிறகு மன நிம்மதியை இழக்க நேரிடலாம்.

மாதக் கடைசியில் வருமானம் திருப்தி தரும். வங்கிச் சேமிப்பு உயரும். தர்ம சிந்தனையோடு சில காரியங்களுக்கு அள்ளிக் கொடுக்க முன்வருவீர்கள். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அந்திய தேசத்திலிருந்து வரும் அழைப்புக்களை ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்று சிந்திப்பீர்கள். பத்தில் குரு சஞ்சரிப்பதால் உத்தியோக மாற்றம், தொழில் மாற்றம் ஆகியவற்றைப் பற்றிய எண்ணம் மேலோங்கும். சுய ஜாதகத்தின் மூலம் பதில் தெரிந்து கொண்டு செயற்படுவது நல்லது.

பெப்ரவரி 19ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 2, 5இற்கு அதிபதி பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். குடும்ப பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடிவிற்கு வரும். கல்யாணம், காது குத்து, கடை திறப்பு விழா என்று புது முயற்சிகளில் ஈடுபட வாய்ப்புக்கள் வந்து சேரும். விலகிச் சென்ற உடன்பிறப்புக்களும், உறவினர்களும் விரும்பி வந்து சேரும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகள், உத்தியோகத்தில் மேலதிக வருமானங்களைப் பெற்று உங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பர்.

மார்ச் 3ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். ராசிநாதன் உச்சம் பெறுவதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். புதிய தொழில் தொடங்கும் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவீர்கள். எதிரிகள் விலகிச் செல்வர். அரசியல்வாதிகளின் ஆலோசனைகள் உங்களுக்குப் பக்கபலமாக இருக்கும்.

தன பஞ்சமாதிபதியான புதன் மீனத்தில் மார்ச் 8ஆம் திகதி முதல் நீச்சம் பெறுகிறார். எனவே குடும்பச்சுமை கூடும். எதையும் ஒரு முறைக்கு இரு முறை யோசித்துச் செய்வதே நல்லது. கல்யாணப் பேச்சுக்கள் முடிவடையவில்லையே என்ற கவலை நீங்கும். விலகிச் சென்ற திருமணப் பேச்சுக்கள் மீண்டும் வந்து சேரலாம். விஷ்ணு வழிபாடும், அனுமன் வழிபாடும் உங்கள் வெற்றிக்கு வித்திடும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

இம்மாதம் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்க, தொடுத்த மாலையை அம்பிகைக்குச் சூட்டி வழிபாடு செய்யுங்கள். விடுத்த கோரிக்கைகள் விரைவில் நிறைவேறும். (தொடரும்)

## செங்கல்பட்டில் இலங்கை அகதிகளைப் பார்க்க அனுமதி மறுப்பு ஏன்?-விளக்கமளிக்க உத்தரவு

(கொழும்பு)

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் அகதிகளை பார்த்துப் பேசுவதற்கு வழக்கறிஞர்களுக்கு அனுமதி மறுத்தது ஏன் என்று விளக்கமளிக்குமாறு தமிழக அரசிற்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் அகதிகள் மீது காவல்துறையினர் தடியடி நடத்தியது மட்டுமன்றி அவர்கள் மீது வழக்குகளும் தொடர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் உள்ள அகதிகளைப் பார்ப்பதற்காகச் சென்ற வழக்கறிஞர் புகழேந்திக்கு செங்கல்பட்டு மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் அனுமதி மறுத்தார்.

இதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கு நேற்று தலைமை நீதிபதி கோகலே, நீதிபதி கே.கே. சசிதரன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது அகதிகளைச் சந்திக்கச் சென்ற வழக்கறிஞர்களுக்குக் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அனுமதி அளிக்க மறுத்தது குறித்து வழக்கறிஞர் மு. ராதாகிருஷ்ணன் எடுத்துரைத்தார்.

அதனைக் கேட்ட நீதிபதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளை சந்திக்கச் சென்ற வழக்கறிஞருக்கு அனுமதி மறுத்தது ஏன் என்று நாளை மறுதினத்திற்குள் விளக்கமளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (2-6)

## சரத் பொன்சேகாவிற்கு எதிரான விசாரணையில் ரில்வினிடம் சாட்சியம் பெற்றுக்கொள்ளப்படலாம்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு எதிரான விசாரணைகளின் போது ரில்வின் சில்வாவிடம் சாட்சியம் பெற்றுக்கொள்ளப்படலாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சரத் பொன்சேகாவிடம் விசாரணை நடத்த முனைந்த சந்தர்ப்பத்தில் அவர் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவிடம் ஆலோசனை பெற்றுக் கொண்டுள்ளதாக ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாபா தெரிவித்துள்ளார்.

இது ஓர் பாரிய இராணுவ சட்ட மீறல் எனவும் இவ்வாறு தம்மிடம் ஆலோசனை பெற்றுக் கொண்டதாக ரில்வின் சில்வா பல தடவைகள் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதன் மூலம் இலங்கைக்கான முதலீடுகளை தடுத்து நிறுத்த பொன்சேகா முயற்சித்துள்ளதாகவும் இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ள முடியாத காரியத்தை பொன்சேகா மேற்கொண்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் இலங்கைக்கு எதிராக சர்வதேச அரங்கில் அபகீர்த்தி ஏற்படுத்த புலிகள் தீவிரம் காட்டிய போதிலும் அது வெற்றியளிக்கவில்லை எனவும் "அதே செயற்பாட்டையே ஜெனரல் சரத் பொன்சேகா மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (2-6)

## மஹரகம ஆர்ப்பாட்டம்; கைதானோருக்குப் பிணை

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மஹரகம நகரில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது கைது செய்யப்பட்டவர்களில் 7 சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட மற்றுமொரு சந்தேக நபரை இம்மாதம் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று முன்தினம் பிற்பகலில் நுகேகொட நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியதால் பொலிசாரின் குறைந்தளவிலான அதிகாரத்தைப் பயன்படுத்த நேர்ந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தடியடிப் பிரயோகமும் நீர்த்தாரைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

சம்பவத்தில் பொலிசாரின் வாகனமொன்றுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. (2-6)

## நிழல் நிறுவனத்தின் மரவிநியோகம்

நிழல் நிறுவனமானது மரமீள் நடுகைத் திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்த முயன்று வருகின்றது. இதன் ஆரம்ப நடவடிக்கையாக பாடசாலைகள், கோவில்கள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கு காட்டு மரங்களையும் பயன்தரு மரங்களையும் இலவசமாக வழங்குதலை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைய வீட்டுத் தோட்டங்களை விருத்தி செய்யும் நோக்குடன் வல்லாரை, அவரை, கொய்யா, மரமுந்திரிகை, பவுண் பழக்கன்று ஆகியவற்றையும் வழங்கி வருகின்றது. இப்பொழுது பலாக்கன்றுகளும் மாகோக்கனிக் கன்றுகளும் காட்டுத் தேக்கும் விநியோகிக்கப்பட்டு வருவதாக நிழல் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் அண்மையில் அநுராதபுரத்திலிருந்து எடுத்துவரப்பட்ட தேக்கங்கன்றுகளை மானிய விலையில் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதால் இவற்றைப் பொது நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பெற்றுக் கொள்ள முடிவதுடன் தனியார், கிராம சேவகரின் சிபார்சுடன் பெற்றுக் கொள்ள முடியுமென நிழல் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (2-6)

### பொன்சேகா கைது விவகாரம் தொடர்பில்

# வெளிநாட்டு ஊடகங்கள் பிழையான வகையில் பிரசாரம் செய்கின்றன - ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)



முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா கைது விவகாரம் தொடர்பில் வெளிநாட்டு ஊடகங்கள் பிழையான வகையில் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக சர்வதேச வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இராணுவச் சட்டத்தின் அடிப்படையில் பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு விசேட சலுகைகளை வழங்குமாறு சில வெளிநாட்டு ஊடகங்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றமை பெரும் ஏமாற்றமளிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல்வாதி என்ற காரணத்திற்காக விசேட சலுகைகளை வழங்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா விவகாரத்தில் இராணுவத்தினர் சுயாதீனமான முறையில் செயற்பட்டுள்ளதாகவும் இந்த விவகாரத்தில் அரசாங்கம் எவ்வித தலையீடுகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும், வெளிநாட்டு இராஜதந்திரிகளும் மட்டுமே விசேட சலுகைகளைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கப்பம் பெற முயன்ற இராணுவக் கப்டன் கைது

## பம்பலப்பிட்டியில் சம்பவம்

(கொழும்பு)

தமிழ் வர்த்தகர் ஒருவரிடம் கப்பம் பெற முயற்சித்த இராணுவக் கப்டன் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பம்பலப்பிட்டி பகுதியிலுள்ள குறித்த வர்த்தகருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாகவும் புலிகளுக்கு குறித்த வர்த்தகர் நிதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தே கப்பம் பெற்றுக்கொள்ள முயற்சித்ததாகக் கூறப்படுகிறது.

அத்துடன் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்க ரூபா 7 மில்லியனை கப்பமாக வழங்குமாறு நபர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை வர்த்தகரிடம் கடமையாற்றிவரும் ஊழியர் ஒருவரும் இதில் தொடர்புபட்டிருப்பதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

### தேர்தலை முன்னிட்டு

# நாடு முழுவதும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புப் பிரிவு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதிலும் தேர்தல் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலுமுள்ள 488 பொலிஸ் நிலையங்களிலும் இந்தப் பிரிவு அமைக்கப்படுகின்றது என்றும் அத்துடன் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா,, அதிபர் பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்கசர் ஆகியோரை உள்ளடக்கிய 75 தேர்தல் நடவடிக்கை அலுவலகங்களும் இயங்கும் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் பொலிஸ் நிலைய மட்டத்தில் தேர்தல் முறைப்பாட்டுக்கென 413 விசேட பிரிவுகளும் நிறுவப்படவுள்ளதாகவும் மூன்று மட்டத்தில் நிறுவப்படும் விசேட கண்காணிப்பு நிலையத்தின் பணிகள் யாவும் பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம், மாவட்ட பொலிஸ் அலுவலகம், பிரதேச பொலிஸ் நிலையம் என்ற மட்டத்தில் நடைபெறுவும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் மா.நவநீத மணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் த. தபேந்திரராஜா கலந்து சிறப்பிப்பதுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி மதிவதனி தபேந்திரராஜா வழங்கி கௌரவிக்கவுள்ளார். (2-4-19)

# தனியார் தொலைக்காட்சி ஒன்றின் அரசியல் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில்லை

## ஐ.ம.சு.கூ. தெரிவிப்பு

(கொழும்பு)

குறிப்பிட்ட தனியார் தொலைக்காட்சி ஒன்றின் அரசியல் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சிக் குழுக் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தொலைக்காட்சி ஊடகம் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவான வகையில் செய்திகளை வெளியிட்டு வருவதாகவும் தமது கட்சி நிகழ்வுகள் தொடர்பான செய்திகளை சேகரிக்குமாறு குறித்த ஊடகத்திற்கு அழைப்பு விடுக்கப்போவதில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்க்கட்சிகள் அரசாங்க ஊடகங்களை நிராகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. (2-6)

# இரு பஸ்கள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலி

## 15 பேர் காயம்

(கொழும்பு)

காலி, ரத்கம பகுதிகளில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பாடசாலை மாணவர்கள் நால்வர் உட்பட 15 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் எல்பிட்டியவிலிருந்து காலி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றுமே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த சுனில் ஷாந்த (வயது - 29) என்பவரே உயிரிழந்தவராவார். விபத்தில் சிக்குண்டு காயமடைந்தவர்கள் காலி கராபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து, குறித்த பஸ்களைச் செலுத்திய சாரதிகளின் கவனயீனத்தால் ஏற்பட்டது எனும் குற்றச்சாட்டின் பேரில் அந்த பஸ்களின் சாரதிகள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் சம்பவம் தொடர்பில் ரத்கம பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-6)

# மேசன், தச்சு தொழிலாளர்களுக்கான தேசிய தகைமைச்சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தேச நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் அமைச்சினால் மேசன், தச்சுத் தொழிலாளர்களிற்கான தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்குவதற்கான செயன்முறைத் தேர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 8 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயன் முறைத் தேர்வில் கலந்து கொள்பவர்கள் செயன்முறைத் தேர்விற்குரிய உபகரணங்களுடன் சமுகம் தருமாறு மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

மேலும் கடந்த மாதம் 15 ஆம்திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்கிற்கு சமுகமளிக்காதவர்களும் மேற்படி செயன்முறைத் தேர்வில் கலந்து தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (14-2-ப)

# நடமாடும் வைத்திய சேவை

(வேலணை)

மண்டைதீவு, அல்லைப்பிட்டி பிரதேசங்களில் தற்போது மக்கள் மீள்குடியேறி வருவதால் இம்மக்களின் நன்மை கருதி வேலணை பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி செனவிரெட்னாவின் முயற்சியால் நடமாடும் வைத்தியசேவை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மண்டைதீவு பிரதேசத்தில் பிரதி திங்கள், புதன் ஆகிய நாட்களில் மதியம் 2 மணிக்கும் அல்லைப்பிட்டி பிரதேசத்தில் பிரதி வியாழன் மதியம் 2 மணிக்கும் நோயாளர்கள் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பிரதேசத்தில் முன்னைய காலங்களில் இயங்கி வந்த மருத்துவமனைகள் போரினால் அழிவடைந்தமையால் மக்களின் நலன் கருதியே இந்த நடமாடும் வைத்திய சேவையை மேற்கொண்டு வருவதாகவும் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தெரிவித்தார். (6-4)





இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் மற்றும் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாரீசன்கூடல் பங்குத் தந்தை அருட்பணி எம்.எம். எச். ஞானேந்திரன் அடிகளார், அதிபர் எஸ். நோபேட் உதயகுமார், ஆசிரியர்கள் மாணவர்களுடன் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# பெண் குழந்தைகள் படிக்கவில்லையா பெற்றோருக்கு கடும் அபராதம்

## ராஜஸ்தான் கிராமத்தில் நடைமுறை

(ஜெய்ப்பூர்)

ராஜஸ்தானில் உள்ள ஒரு கிராமத்தில், பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பவில்லை எனில் சம்பந்தப்பட்ட குழந்தையின் பெற்றோருக்கு அபராதம் விதிக்கும் நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

ராஜஸ்தான் பார்மர் மாவட்டத்தில் உள்ளது துங்கெரோகி தலா என்ற கிராமம். இங்கு மொத்தமே 200 குடும்பங்கள் தான் வசிக்கின்றனர். கடந்த 25 ஆண்டுகளுக்கு முன் இந்த கிராமத்தை சேர்ந்தவர்கள் தங்கள் பெண் குழந்தைகளை பள்ளிக்கே அனுப்புவது இல்லை. இதனால் அந்த கிராமத்தை சேர்ந்த பெண்கள், பல தலைமுறையாக கல்வியறிவு இல்லாமலே வளர்ந்தனர். காலப்போக்கில் தான் இதன் பாதிப்பு அந்த கிராமத்தை சேர்ந்த பெரியவர்களுக்கு தெரியத் தொடங்கியது.

இதனால் கிராம பெரியவர்கள் ஒன்று கூடினர். அதில் நாட்டாமையாக இருந்தவர் அதிரடியாக ஒரு தீர்ப்பை அறிவித்தார். பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாவிட்டால் சம்பந்தப்பட்ட குழந்தைகளின் பெற்றோர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்பது தான் அந்த முடிபு.

இதனால் அபராதத்துக்கு பயந்து கொண்டு பலரும் தங்களது பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பத் தொடங்கினார்கள். தற்போது இந்த கிராமத்தை சேர்ந்த அனைத்து பெண்களும் கல்வியறிவு பெற்றவர்களாக மாறிவிட்டனர். இன்னும் பல பெண்கள் நல்ல வேலை கிடைத்து நகரங்களுக்கு குடிபெயர்ந்து விட்டனர்.

இந்த கிராமத்தை சேர்ந்த கேசர் என்பவர் கூறுகையில்,

தற்போது எங்கள் கிராமத்தில் உள்ள பள்ளியில் படிக்கும் ஆண் குழந்தைகளின் எண்ணிக்கை 180 தான். அதேநேரத்தில் 225 பெண் குழந்தைகள் படிக்கின்றனர். இருந்தாலும் மேல்நிலை கல்வி படிப்பதற்கு இங்கு பள்ளி இல்லை. ஆறு கி.மீ தூரம் நடந்து அருகில் உள்ள கிராமத்து பள்ளிக்கு தான் செல்ல வேண்டும் என்றார்.

இந்த கிராமத்தைப் பின்பற்றி அருகில் உள்ள கிராமங்களிலும், இதேபோல் அபராதம் விதிக்கும் நடைமுறை தற்போது கடைபிடிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# தமிழில் படித்தாலும் உலக அளவில் சாதிக்கலாம்

## சந்திராயன் திட்ட இயக்குனர்



தமிழில் படித்தாலும் உலக அளவில் அறிவால் அறிவியல் கண்டுபிடிப்புகளில் சாதிக்கலாம் என்று சந்திராயன் திட்ட இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை கூறினார்.

சென்னையில் நேற்று முன்தினம் கோபாலபுரம் இல்லத்தில் முதல்வர் கருணாநிதியை சந்தித்து விட்டு திரும்பிய அவர் கூறியதாவது,

தமிழில் படித்து விட்டு உலகத்தில் பல நாடுகளில் விஞ்ஞானிகளாக , ஆராய்ச்சியாளர் களாக உள்ளவர்கள் மூலம், கோவையில் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அறிவியல் அமர்வு ஒன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ் படித்து அறிவியில் அறிஞர்களாக பல நாடுகளிலும், அமெரிக்காவில் நாசாவிலும் பணிபுரியும் தலைசிறந்த விஞ்ஞானிகள் பலர் தங்கள் கண்டுபிடிப்புகள் பற்றியும் படைப்புகள் பற்றியும் இந்த அமர்வில் உரையாற்றுகின்றனர்.

'மேலும் உலகச் செம்மொழி மாநாட்டில் நடத்தப்படும் அறிவியல் அமர்வில் பிரபல விஞ்ஞானிகள் 50 பேர் கலந்து கொள்கின்றனர். இந்த அமர்வை சிறப்பாக நடத்துவது பற்றி ஆலோசிக்க முதல்வரை சந்திக்க வந்தேன். அவர் வழிகாட்டுதலின் படி இந்த அமர்வு சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

நிலவுக்கு அனுப்பப்பட்ட சந்திராயன்-1 மூலம் நிலவில் தண்ணீர் இருப்பதை கண்டு பிடித்துள்ளோம். சந்திராயன்-2 வரும் 2013 ஆம் ஆண்டிற்குள் நிலவுக்கு அனுப்பப்படும். இது நிலவில் உள்ள கனிமவளம் குறித்து ஆராயும். இவ்வாறு மயில்சாமி அண்ணாதுரை மேலும் கூறினார். (2-6)




# இந்தியா-பிரிட்டன் இடையேயான அணுசக்தி ஒப்பந்தம் கைச்சாத்து

(புதுடில்லி)

இந்திய அணுசக்தி ஆணையத்தின் தலைவர் ஸ்ரீகுமார் பானர்ஜி மற்றும் இந்தியாவுக்கான பிரிட்டிஷ் தூதர் ரிச்சர்ட் ஸ்டேக் இருவரும் டில்லியில் அணுசக்தி ஒத்துழைப்பு கூட்டு பிரகடனத்தில் வியாழக்கிழமை கையெழுத்திட்டனர்.

இந்தியாவில் அணுசக்தி வர்த்தகம் மற்றும் அறிவியல் தொழில்நுட்ப நிலையங்கள் ஆகியவற்றில் பிரிட்டன் காலூன்ற இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது. இதன் மூலம் அணு உலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பிரிட்டிஷ் நிறுவனங்கள் ஏற்றுமதிசெய்வதற்குவாய்ப்புஉருவாகியுள்ளது.

முன்னதாக இரு நாடுகளிடையிலான கூட்டு பொருளாதார வர்த்தக குழுக் கூட்டம் லண்டனில் இந்த மாத தொடக்கத்தில் நடைபெற்றது. அதில் மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா பங்கேற்றார். அப்போது இரு நாடுகளிடையே அணுசக்தி பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான கூட்டு பிரகடனம் குறித்து முடிபு செய்யப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் உள்ள சில முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிப்பதற்காக பிரிட்டன் அமைச்சர் பாட் மெக்ஃபடான் இந்த வார இறுதியில் டில்லி வருகிறார்.

அப்போது அணு உலைகளுக்குத் தேவையான எரிபொருட்களை விநியோகம் செய்வது உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் புதிய அணு உலைகள் அமைப்பதற்கு தேவையான பாகங்களை வழங்குவது தொடர்பாகவும் அப்போது முடிபு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விதிக்கப்பட்டிருந்த சர்வதேச அணுசக்தி வர்த்தகத் தடை கடந்த 2000ஆம் ஆண்டு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அணுசக்தி ஒத்துழைப்பு இந்தியாவுடன் கையெழுத்திடும் எட்டாவது நாடாக பிரிட்டன் இணைந்துள்ளது. இதற்கு முன்னர் பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, கஜகஸ்தான், மங்கோலியா, ஆஜென்டீனா மற்றும் நமீபியா ஆகிய நாடுகள் அணுசக்தி பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக இந்தியாவுடன் கையெழுத்திட்டுள்ளன.

கனடாவுடன் அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடர்பாக இந்தியா நடத்திவரும் பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. (2-6)



அணுசக்தி ஒத்துழைப்பு கூட்டு பிரகடனம் கையெழுத்தானதைத் தொடர்ந்து பரஸ்பர வாழ்த்து தெரிவிக்கும் (இடமிருந்து) இந்தியாவுக்கான பிரிட்டிஷ் தூதர் சர் ரிச்சர்ட் ஸ்டேக் மற்றும் இந்திய அணுசக்தி ஆணையகத்தின் தலைவர் ஸ்ரீகுமார் பானர்ஜி.

# மாணவர் விடுதியில் தீ விபத்து; 12 பிள்ளைகள் உடல் கருகி பலி

(இடாநகர்)

பள்ளிக் குழந்தைகள் தங்கி இருந்த விடுதியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதில் 12 பேர் தீயில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தனர். அருணாசலபிரதேச மாநிலம் குருங்கும்பி மாவட்டம் பாலின் என்ற இடத்தில் தனியார் பள்ளி ஒன்று உள்ளது. இந்த பள்ளிக்கு அருகிலேயே தனியாருக்கு சொந்தமான விடுதி அமைந்துள்ளது.

இதில் சுமார் 70 மாணவர்கள் தங்கி இருந்தனர். அந்த விடுதிக்கு சொந்தமாக கட்டடம் இல்லாததால் மூங்கில் மற்றும் வைக்கோல் மூலமாக கட்டப்பட்ட கட்டடத்திலேயே இயங்கி வந்தது.

கடந்த புதன் இரவு இந்த பகுதியில் மின்சாரம் இல்லை. இதனால் மாணவர்கள் அனைவரும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் படித்துக் கொண்டிருந்தனர்.

இரவு சுமார் 10 மணியளவில் திடீரென அந்த விடுதியில் தீ பற்றிக் கொண்டது. பின்னர் விடுதியின் அனைத்து பகுதிகளுக்கும் பரவ ஆரம்பித்தது.

விபத்து குறித்து தீயணைப்பு மீட்புப் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் சம்பவ இடத்திற்கு வருவதற்குள்ளாகவே அந்த விடுதி முழுவதுமாக எரிந்து சாம்பலானது.

இந்த தீ விபத்தில் சிக்கிய 12 பேரின் சடலங்கள் கருகிய நிலையில் மீட்கப்பட்டன. இதில் 3 பேரின் உடல்கள் அடையாளம் தெரியவில்லை. மேலும் ஏராளமானோர் விபத்தில் சிக்கி தீக்காயம் அடைந்தனர்.

இந்த நிலையில், அருகில் உள்ள பொது மக்கள் சம்பந்தப்பட்ட பள்ளியை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தினர். இதனைத் தொடர்ந்து அந்த பகுதியில் ஏராளமான பொலிஸார் மற்றும் துணை இராணுவப்படையினர் குவிக்கப்பட்டனர். (2-6)

# தெலுங்கானா தனிமாநிலத்துக்காக எவ்வித தியாகத்தையும் செய்யத்தயார்

## -சந்திரசேகர ராவ்-



தெலுங்கானா மாநிலம் அமைய எந்த தியாகத்துக்கும் அதன் ஆதரவாளர்கள் தயாராக உள்ளதாக தெலுங்கானா ராஷ்டிர சமிதி தலைவர் சந்திரசேகர ராவ் தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா மாநிலம் அமைப்பது தொடர்பாக ஆராய நீதிபதி ஸ்ரீ கிருஷ்ணா தலைமையிலான குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

இந்நிலையில் தெலுங்கானா விவகாரம் தொடர்பாக முக்கிய ஆலோசனை நடத்த தனி மாநில ஆதரவாளர்கள் ஐதராபாத்தில் உள்ள கேசவ ராவ் எம்.பி. வீட்டில் கடந்த புதன்கிழமை மாலை கூடினார். இக் கூட்டத்தில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் சந்தித்துப் பேசிய சந்திரசேகர ராவ்,

தெலுங்கானா மாநிலம் அமைக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அளித்த உறுதிமொழியை நீதிபதி ஸ்ரீ கிருஷ்ணா குழு, கவனிக்கத் தவறினால் தனி மாநிலத்துக்காக எவ்வித தியாகத்தை செய்யவும் தயாராக உள்ளதாக கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் உறுதி தெரிவித்தனர்.

இந்த குழு தனது பதவிக்காலத்துக்குள் தீர்க்கமான முடிபை எடுக்க வேண்டும் என கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார். (2-6)

# தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு குடியுரிமை

(சிவகங்கை)

காதல் திருமணம் செய்யும் அகதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு, இலங்கை குடியுடிரிமை பெற்றுத்தர தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.


அகதிகள் முகாமில் உள்ள சிலர், தமிழகத்தில் உள்ளவர்களை காதல் திருமணம் செய்துள்ளனர். இவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு இந்திய, இலங்கை குடியுரிமை கிடைப்பதில்லை.

இக்குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்க, தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இற்ககமைய பிறப்பு சான்றிதழ் பெற்றோரின் விவரங்கள், சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தில் பதிவு செய்து, குடியுரிமை பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் மறுவாழ்வு அதிகாரி ஒருவர் கூறுகையில், காதல் திருமணத்தால் பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழக அரசின் கருணை தொகை வழங்க முடியாத நிலை இருந்தது. தற்போது குடியுரிமை பெறவாய்ப்பு ஏற்பட்டிருப்பதால் கருணை கிடைக்கும் என்றார். (2-6)

# நெற்பீடைகளும் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### பனிப்பூச்சி

நெற் பயிரில் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சி பீடைகளுள் பனிப்பூச்சியும் ஒன்றா'கும். இதனை ஆங்கிலத்தில் Thrips (திரிப்ஸ்) என அழைப்பார்கள். தைசனொப்தீரா (Thysanoptera) வருணத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு பூச்சியினமாக இது இருப்பது சிறப்பானது எனலாம். வேறு வேறு வகையான பனிப்பூச்சிகளின் தாக்கம் எங்களூரில் வளரும் பயிர்களில் இருந்தாலும் நெல்லில் சேதத்தை ஏற்படுத்தும் வகைக்கு தனித்துவமான பெயருண்டு. அதனை *இஸ்ரென்கிறோ திரிப்சு பைபோமிசு (Stenchetothrips biformis)* என அழகாக பெயரிட்டுள்ளார்கள். இந்த விலங்கியல் பெயரில் முன்பகுதி சாதிப் பெயரையும் (Genera) பின்பகுதி இனப் பெயரையும் (Species) குறிப்பிடுவதாக இரு சொற்பெயரீடு விளக்குகின்றதல்லவா. சாதிப் பெயரில் திரிப்ஸ் என்னும் சொல் இணைந்திருப்பதனை அவதானியுங்கள். இது இதனது விலங்கியல் பெயரை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள உதவும்.


### பனிப்பூச்சியின் தாக்கம்

நெற்பயிரில் நாற்றுப் பருவமே (Seedling Staga) பனிப்பூச்சியினது தாக்கத்திற்கு அதிகளவில் உட்படுத்தப்படும். விதை நெல்லெறிந்து (Direct sowing) விளையும் நெற்பயிரில் இதனது தாக்கம் அதிகமாகவே காணப்படும். அதுவும் நாற்றுப் பருவத்தில் வயலிலுள்ள நீரினளவோ ஈரப்பதனோ சற்று குறைவாக இருந்தால் குறிப்பாக இம்முறை காலபோகத்தில் நடந்தது போல பருவம் தப்பி மழை பிந்திப் பெய்ததனால் நெல் வயலில் நாற்றுக்கள் கருகிப்போகும் நிலை வந்ததே அது போன்றதொரு சூழ்நிலையில் பனிப்பூச்சியின் தாக்கம் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கும். சூழல் வெப்பநிலை அதிகரித்து காணப்படும் நிலையில் பனிப்பூச்சியின் பெருக்கம் அதிகமாக இருக்கும். அதாவது சூழல் வெப்பநிலை அதிகரிக்கும் போது பனிப்பூச்சி தனது வாழ்க்கை வட்டத்தை இயன்றளவு சுருக்கி தன் இனம் பெருக்கும். அதன் காரணமாக விரைந்து பெருகும் தன்மையினைக் காணலாம்.

நாற்று மேடைகளில் நெற்பயிரை வளர்த்து நாற்று நடவு மூலம் (Transplanting) செய்கை பண்ணப்படும் நெல்லை வளர்க்கும்போது பனிப்பூச்சியினால் ஏற்படுத்தப்படும் சேதத்தை தவிர்த்துக் கொள்ளலாம். அதாவது நாற்றுமேடைப் பருவத்தில் அதுவும் நாற்றுக்களில் மட்டுமே பனிப்பூச்சியின் சேதம் இருப்பதனால் நாற்று மேடையை சிறந்த முறையில் பராமரிப்பதன் மூலம் நெல் பயிரினப் பனிப்பூச்சியின் தாக்கத்தை தவிர்க்க முடியும். இதிலிருந்து நாற்று நடவு செய்யும் பயிர்ச்செய்கையின் மூலமாக பனிப்பூச்சியின் சேதத்தை தவிர்க்க முடியுமென அறிய முடிகின்றதல்லவா! மாறாக பனிப்பூச்சியின் சேதம் நெற்பயிரில் அதுவும் விதையெறிந்து செய்யப்பட்ட பயிர்ச் செய்கை மூலம் விளைவிக்கப்பட்ட நெற்பயிரில் அதிகரிக்கும்போது ஊடு புகுந்து தாக்கும் குறிப்பிட்ட பூச்சி நாசினிகளான இமிடாகுளோர்பிறிற்று (Imidaclorprid), டைமீதோயேற்று (Dimethoate), மெற்றசிஸ்ரெக்சு (Metasystex) மற்றும் பைபுரோனில் (Fipronil) என்பனவற்றைப் பயன்படுத்தியும் கட்டுப்படுத்தலாம். பீடை நாசினி பயன்பாட்டை இயன்றளவு பயிர்ச் செய்கை செய்வதே சிறந்தது. வடபகுதியில் வன்னிப் பிரதேசத்தில் இப்பனிப்பூச்சியின் சேதத்தை இலகுவாக அவதானிக்கலாம்.

### பனிப்பூச்சியின் வாழ்க்கை வட்டம்

பனிப்பூச்சியின் வாழ்க்கை வட்டம் முட்டை, புழுப் பருவம் (குடம்பிப் பருவம்) கூட்டுப்புழு, நிறைவுடலி என நான்கு முக்கிய பருவங்களை உள்ளடக்கியிருக்கும். இதில் குடம்பி மற்றும் நிறைவுடலிப் பருவங்கள் மட்டுமே சாறு உண்ணும் பருவங்களாகவும் சேதத்தை ஏற்படுத்தும் பருவங்களாகவும் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தினால் பனிப்பூச்சியின் சேதத்தை கட்டுப்படுத்த முடியும். நிறைவுடலிப் பருவம் மட்டுமே விரைந்து பரவும் தன்மையுடையதாதலினால் நிறைவுடலிப் பருவத்தை கட்டுப்படுத்தும் பொறிமுறைகள் இவற் றினது சேதத்தைத் தவிர்க்க என்றுமே உதவு ம்.




பனிப்பூச்சி தனது முட்டைகளை இலைப் பரப்பின் கலங்களுக்குள்ளே இடும். முட்டை பொரித்து வெளிவரும் குடம்பி அல்லது புழுப்பருவம் இரு நிலைகளாக சாறு உறிஞ்சி சேதத்தை செய்யும். இப்புழுப்பருவத்தினாலேயே அதிகளவு சேதம் ஏற்படுத்தப்படுகின்றது.

பனிப்பூச்சியின் எண்ணிக்கை அதிகரிப்பதையோ, அவற்றின் சேதம் அதிகரிப்பதையோ நிறப் பொறிகளை வைத்து கண்டு பிடிக்க முடியும். பனிப்பூச்சிக்கு பிடித்த நிறங்களுள் மெல்லிய நீலமும் மஞ்சளும் அடங்கும். இந்நிறப் பொறிகளை வயலில் வைத்து பனிப்பூச்சியின் இருப்பை இலகுவில் தெரிந்து கொள்ளலாம். பனிப்பூச்சியின் பெருக்கத்தை அறிய கண் காணிக்க இந்நிறப்பொறிகள் பெரிதும் உதவும். மழை பெய்தால் பனிப்பூச்சியின் தாக்கம் வெகுவாகக் குறைந்துவிடும். மழையினால் பனிப்பூச்சிகள் கழுவப்பட்டுப் போவதாக அறியப்படுவது உண்மையே. அத்துடன் மழை பெய்யும்போது ஈரப்பதன் அதிகரித்து இயற்கையாக எமது சூழலிலுள்ள நன்மை தரும் பூஞ்சண நுண்ணங்கிகள் பெருக்கமடைந்து பனிப்பூச்சியைக் கட்டுப்படுத்துகின்றது. இதனால் வெறுமனே நீர்ப்பாசனம் செய்வதால் நீரை இழப்பதும், விரயமாவதையும் தவிர்க்க தூவல் நீர்ப்பாசன முறை சிறந்தது எனக் குறிப்பிடுகின்றார்கள். தூவல் நீர்ப்பாசன முறையினால் (Sprinkler irrigation) நீர் விரயமாவதைத் தடுப்பதுடன் பனிப்பூச்சியின் பெருக்கத்தைக் குறைத்து அதன் சேதத்தினைத் தவிர்க்கலாம்.

(தொடரும்)

## தென்னிலங்கையின் பல பகுதிகளுக்கு யாழிலிருந்து விரைவில் நேரடி பேருந்து

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் இருந்து தென்னிலங்கையில் உள்ள பல பகுதிகளுக்கும் பேரூந்து சேவைகளை நேரடியாக ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணையகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்ததாவது; தென்னிலங்கையில் உள்ள பல நகரங்களுக்கு யாழில் இருந்து நேரடி பேரூந்து சேவைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய சொகுசு பேரூந்து, நடுத்தர சொகுசு பேரூந்து, சாதாரண பேரூந்து, குளிரூட்டப்பட்ட பேரூந்து எனப் பலதரப்பட்ட சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இங்கிருந்து கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருமலை ஆகிய நகரங்களுக்கான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான அதிவேக சொகுசு பேரூந்து சேவைக்காக 8 பேரூந்துகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன். அதில் பயணம் மேற்கொள்ள ஒருவருக்கு ஆயிரத்து 35 ரூபாய் அறவிடப்படும்.

மேலும் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் 8 சொகுசு பேரூந்துகளும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. அதில் பயணம் மேற்கொள்வதற்கு ஒருவர் 690 ரூபாய் செலுத்த வேண்டும்.

மேலும் இந்தச் சேவைக்காக தற்போது கொழும்பு - யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் - திருமலை, யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் - கண்டி, மட்டக்களப்பு- வவுனியா ஆகிய ஐந்து முக்கிய நகரங்களுக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

(2-6)

## சட்டவிரோதமாக மத்திய கிழக்குக்கு செல்ல முயன்ற பெண்ணுக்கு அபராதம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் தொழிலுக்காகச் செல்லும்போது வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து காப்புறுதி செய்து கொள்ள வேண்டியது அவசியமாயினும் அவ்வாறு செய்யாமல் மத்திய கிழக்கு நாடொன்றில் வேலைக்குச் செல்வதற்காக முயற்சி செய்த குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட பெண்ணுக்கு நீர்கொழும்பு மேலதிக நீதிவான் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

அம்பலாங்கொடையைச் சேர்ந்த பெண்ணொருவருக்கே மேற்படி அபராதத் தொகை விதிக்கப்பட்டது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து காப்புறுதி செய்து கொள்ளாமல் சுற்றுலா விசாவில் மோசடியான முறையில் மத்திய கிழக்குக்குச் செல்ல முற்பட்டபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகளால் மேற்படி பெண் கைது செய்யப்பட்டிருந்தார். (2-6)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பல்துறைப்புலவர் க.சி. குலரத்தினம் எழுதிய *இந்து போர்ட் இராசரத்தினம்* நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சைவ வித்தியா விருத்திச் சங்க பிரார்த்தனை மண்டபத்தில் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பௌதீகவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் க. கந்தசாமி கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக சி. இராசநாயகம் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் வழங்கவுள்ளதுடன் நூலின் முதற்பிரதியை க. சதானந்தனும் சிறப்புப் பிரதியை திருமதி திலகவதி மாணிக்கவாசகரும் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

மேலும் நூல் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் மா. சின்னத்தம்பி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

(4)

கெட்டிக்காரன் தவறு– வெளிக்குத் தெரியாது! ஆனால் முட்டாளின் தவறுதான் தம்பட்டம் அடிக்கும். –அமெரிக்கா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com


# எப்போதும் இந்நாட்டில் வாய்மையே வெல்லும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

2500 வருடங்கள் பௌத்த உபதேசங்களால் போதிக்கப்பட்ட நன்றி உணர்வுடைய மக்கள் வாழும் இந்த நாட்டில் எப்போதும் வாய்மையே வெல்லும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தங்காலையில் தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷவின் அரசியல் வாழ்க்கையை ஆரம்பிக்கும் நிகழ்வு தங்காலை நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது.

அரசியல் என்பது சண்டித்தனமும் பழிவாங்குதலோ அல்ல. மக்களைப் பயமுறுத்தி அரசியல் நடத்திய யுகத்தை இம்முறை ஜனாதிபதி தேர்தலோடு நாட்டிலிருந்தே தம்மால் ஒழிக்க முடிந்தது.



எவருக்கும் அரசியல் செய்யக் கூடிய உரிமைகள் உள்ளது. எனினும் நாட்டை மீண்டும் பயங்கரவாதிகளுக்கு காட்டிக் கொடுப்பதற்கோ நாட்டின் அமைதியையும் சமாதானத்தையும் சீர்குலைப்பதற்கோ எவருக்கும் உரிமை கிடையாது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ சகல இன, மத, சமூகங்களையும் கொண்ட இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொண்டு இந்நாட்டை கட்டியெழுப்ப அர்ப்பணிக்கப் போவதாக தெரிவித்துள்ளார். (2-6)

## மகாநாயக்கர்கள் எதிர்ப்பு திணறுகிறது அரசு

ஜெனரல் சரத் பொன்சேகாவை கைது செய்து தடுத்துவைப்பதன் மூலம் நேர்க்கணிய விளைவுகள் ஏற்படும் என அரசு எதிர்பார்த்திருந்தாலும், நிலைமை தமக்கு சாதகமாக இல்லை என்பதை உணரும் கட்டத்தில் அரச தரப்பு உள்ளது.

சரத் பொன்சேகாவைக் கைது செய்வதென்பது அவருக்கு தண்டனை வழங்குவதற்கானதல்ல. அது அரசின் ஒரு ஒத்திகை நடவடிக்கை ஆகும்.

அதாவது ஜெனரல் சரத் பொன்சேகாவைக் கைது செய்வதன் மூலம் பொதுமக்கள்–படைத்தரப்பு–அரசியல் கட்சிகள் மற்றும் சர்வதேச சமூகம் என்பவற்றின் நாடித்துடிப்பை அறிந்து கொள்வது அரசின் முதலாவது நோக்கம்.

இரண்டாவது, ஜனாதிபதித் தேர்தல் முறைகேடாக நடந்தது என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கள் வலுவடையாமல் பாதுகாத்தல்.

இந்த இரண்டு நோக்கங்களையும் சரத் பொன்சேகாவின் கைது நிறைவுபடுத்தியுள்ளது.

அதில் ஜனாதிபதித் தேர்தல் முறைகேடானது என்ற எதிர்க்கட்சிகளின் கோஷத்தை அடியொட்டத் தறித்து விட்டதில் அரசுக்கு மாபெரும் வெற்றி.

அதேநேரம் சரத் பொன்சேகாவின் கைது தொடர்பில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தும் எனஅரசு எதிர்பார்க்கவில்லை.

இதற்கு மேலாக உள்நாட்டில், சரத் பொன்சேகாவின் கைது பயத்தை ஏற்படுத்துவதற்கு மாறாக எதிர்ப்பை உருவாக்கி விட்டது.

அதிலும் மகாநாயக்கர்கள் சரத்பொன்சேகாவின் கைதை கண்டித்தமை அரசுக்கு ஏற்பட்ட தோல்வி எனலாம்.

யாரெல்லாம் எதிர்த்தாலும் அஞ்சாத இலங்கை ஆட்சியாளர்கள் பௌத்த பீடாதிபதிகள், மகாநாயக்கர்கள் எதிர்த்தால் அதை இம்மியும் தாங்கிக் கொள்ள மாட்டார்கள்.

இந்நிலையில் சரத் பொன்சோகவின் கைதை பௌத்த மகாநாயக்கர்கள் எதிர்த்தமையால்,

அவர் விடுதலை செய்யப்படுவார் என்பது உறுதியாகிவிட்டது. அதனை மேலும் உறுதி செய்வதாக மகிந்த–ரணில் சந்திப்பு அமைந்துள்ளது.

சரத் பொன்சேகா விரைவில் விடுதலை செய்யப்படுவார் என்பது உண்மையாயினும் அவர் அரசியல் புலத்தில் நின்று பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, எதிர்க்கட்சிகளின் கூட்டமைபில் இருந்து விலகி தனது யானைச் சின்னத்தை முன்னிறுத்த முற்பட்டமை சரத் பொன்கேகாவை கையறுநிலைக்கு தள்ளிவிட்டதென்பதும் மீண்டும் இலங்கையில் இரண்டு பிரதான கட்சிகள் என்று கோட்பாடு அரங்கேறியதுமே மிச்சம்.

# பகிடிவதையை முற்றாக தடைசெய்ய நடவடிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதையை முற்றாகத் தடை செய்வதற்குத் தேவையான புதிய சுற்றறிக்கை ஒன்று சகல பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பகிடிவதை தொடர்பான சட்டத்தை கருத்திற் கொண்டு புதிய சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய இந்த வருடத்தில் இருந்து பல்கலைக்கழகங்களில் பகிடிவதை இடம்பெறுவதை முற்றாகத் தடை செய்வதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் அத்துடன் பகிடிவதை செய்யும் மாணவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் எனவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

மேலும் பகிடிவதையை பல்கலைக்கழங்களில் இருந்து முற்றாக நிறுத்துவதற்கு பல்கலைக்கழ்க மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (2-6)

## பட்டதாரிகள் அல்லாத ஆசிரியருக்கான பயிற்சிநெறி

(கொழும்பு)

பட்டதாரிகள் அல்லாத 9 ஆயிரத்து 800 ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கான விசேட திட்டமொன்று அமுல்படுத்தப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

42 நிலையங்களில் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமாக நடத்தப்படும் இந்தப் பயிற்சி நெறிக்காக 43 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும்.மேலும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இப் பயிற்சி நெறி வார இறுதி நாட்களில் நடைபெறுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## ஆலோசனைக் குழுக்கூட்டமும் நிர்வாக உறுப்பினர் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஆலோசனைக் குழுக் கூட்டமும், 2010ஆம் ஆண்டிற்கான ஆலோசனைக் குழு உறுப்பினர் தெரிவும் 18.02.2010ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்துடன் இக்கூட்டத்தில் வலிகாமம் வடக்கு பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தற்போது ஆலோசனைக்குழு உறுப்பினர்களாக இருப்பவர்கள், பிரதேச சமூக நலன்விரும்பிகள், சனசமூக நிலையப் பிரதிநிகள், மாதர்சங்கப் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் என்போரை இக்கூட்டத்தில் கலந்து ஆலோசனைகளை வழங்கியுதவுமாறு வலிவடக்கு பிரதேச சபை செயலாளர் கேட்டுள்ளார். (2-6)

# இலங்கையர் ஆயிரம் பேருக்கு கனடாவில் தொழில்வாய்ப்பு

இவ்வாண்டில் ஆயிரம் பேருக்கு கனடாவில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தொழிலுறவுகள், மனிதவள அமைச்சர் அதாவுத செனவிரட்ன தெரிவித்தார்.

தொழில் அமைச்சில் இடம் பெற்ற நிகழ்வின் போதே இவ்வாறு தெரிவித்தார். இலங்கையில் வடமேல் மாகாணத்திலுள்ள வயம்ப பயிற்சி நிறுவனமும் கனடாவிலுள்ள கீகின் கல்லூரியும் இணைந்தே மேற்படி வேலை வாய்ப்புக்களுக்கான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

கனடாவின் நடைமுறை நிர்வாகமொழி ஆங்கிலமாக உள்ளதால் மொழிப்பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சிகளை வழங்குவதுடன் தேர்ச்சியானவர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பான சகல நடவடிக்கைகளையும் மேற்படி நிறுவனங்களே முன்னெடுக்கும் எனவும் அதற்கான ஒத்துழைப்புக்களை மட்டுமே தொழிலமைச்சு வழங்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2-6)


## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்


### கல்வியும் சமுதாயமும்



கடவுளிடம் நம்பிக்கையில்லாதவன் ,தத்துவ தரிசனங்கள்இல்லாதவன்,மதப்பிரிவு எதிலும் சேராதவன்,எந்தவொரு கிறிஸ்தவக் கோயிலுக்கும் இந்துக் கோயிலுக்கும் செல்லாதவன்,இலௌகிகப் பற்றிலேயே தோய்ந்து போனவன் என்று இப்படியெல்லாம் ஒருவன் இருந்தாலுங்கூட, அவனும் மிக உயர்ந்த நிலையை அடையமுடியும் என்பதைப் புத்தர் பெருமா னுடைய வரலாறு காட்டுகிறது.... ஒரு யாகத்தில் விலங்குகளை பலியிடுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக தமது உயிரை வழங்கவும் அவர் ஒருவர் தான் எப்போதும் தயாராக இருந்தார். “நீ சொர்க்கம் போவதற்கு ஓர் ஆட்டுக் குட்டியை பலியிடுவது உதவி செய்யும் என்றால் ,ஒரு மனிதனை பலியிடுவது அதை விடவும் அதிகமாக உனக்கு உதவி செய்யும். எனவே என்னை நீ பலியிடு” என்று ஒரு முறை ஓர் அரசனிடம் அவர் கூறினார். அதைக் கேட்ட அந்த அரசன் வியப்படைந்து போனான்.

“நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காக மட்டுமே வாழ்கிறார்கள். மற்றவர்களுடைய நன்மைக்காக அறிஞன் தன்னைத்தானே தியாகம் செய்து விட வேண்டும்” உனக்கு நான் நன்மை செய்வதன் மூலமாகத்தான் என்னுடைய நன்மையை நான் பெற முடியும்.இதைத் தவிர வேறொரு வழியுமில்லை.




**கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.**

**இந்நிகழ்வில் கரித்தாஸ் கியூடெக் நிறுவன உத்தியோகத்தர் ம.பத்மசேகரி பயனாளி ஒருவருக்கு சுயதொழில் முயற்சி கொடுப்பனவாக தையல் இயந்திரமொன்றை கையளிப்பதையும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட பாடசாலை மாணவி ஒருவருக்கு மூக்கு கண்ணாடி வழங்குவதையும் படங்களில் காணலாம்.**

# ஐ.நா.வின் மனிதஉரிமை ஆணையாளருடன் அமைச்சர் சமரசிங்க சந்தித்துப் பேச்சு



இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள், அமைச்சர் மகிந்த சமரசிங்க இலங்கையில் மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றம் மற்றும் அதனைப் பேணுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து ஜெனிவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையைச் சந்தித்து விளக்கமளித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகளைப் பேணுவதை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றை வகுப்பதில் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு நடைபெற்ற மனித உரிமைகள் சபை அமர்வில் இடம்பெற்ற உலகளாவிய ரீதியிலான மனித உரிமைகள் மீளாய்வு நடவடிக்கைகளின் போது வழங்கப்பட்ட வாக்குறுதியின் வெளிப்பாடு இந்தச் தேசிய செயற்பாட்டு திட்டமாகும்.

இந்த செயற்பாட்டுத்திட்டத்தின் முதலாவது நகலை பூரணப்படுத்துவது தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் அடுத்தகட்டமாக எடுக்கப்படவுள்ள நடவடிக்கை ஆகியவை பற்றி அமைச்சர் விளக்கமாகக் கூறினார்.

குறிப்பிட்ட செயற்பாட்டுத்திட்டம் மேலும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவதுடன் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமுகத்தில் ஆலோசிக்கப்பட்டு மீளாய்வுக்கு உட்படுத்தப் படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசியல் எல்லைகளுக்கு அப்பால் பரந்துபட்ட ஆதரவை பெறும் வகையில் அனைத்து தரப்பினரும் இணங்கக் கூடிய ஆவணமொன்றை தயாரிப்பதே இதன் நோக்கம் என்று அமைச்சர் குறிப்பிட்டதுடன் பூரணப் படுத்தப்பட்ட இறுதி நகல் அமைச்சரவைக்கு



அதன் கருத்துரை மற்றும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை வரவேற்ற ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நாட்டில் மனித உரிமைகளின் நிலை மோதல்களின் பின்னரும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். (2-6)

## ஒபாமாவுடன் தலாய்லாமா சந்திப்பு

திபெத் புத்தமத தலைவர் தலாய்லாமா 10 நாள் பயணமாக அமெரிக்கா செல்கிறார். அப்போது அவர் அமெரிக்கா அதிபர் பராக் ஒபாமாவை சந்திக்க உள்ளார்.

தலாய்லாமாவை ஒப்பாமா சந்திக்கக் கூடாது என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. இதை அமெரிக்கா பொருட்படுத்தவில்லை. தலாய்லாமாவை அதிபர் ஒபாமா நிச்சயம் சந்திப்பார் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. (2-6)

## ஜோர்தானில் வீதி விபத்தில் இலங்கைப் பெண் மரணம்

(கொழும்பு)

ஜோர்தானில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் அங்கு பணிபுரிந்த இலங்கைப் பெண்ணொருவர் உயிரிழந்தார். இத்தகவலை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் மேலதிக பொது முகாமையாளர் எல்.கே. றுகுனுகே தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் அதிர்ச்சியடைந்த 10 இலங்கைப் பெண்கள் அதிர்ச்சி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளனர்.

உயிரிழந்த 28 வயதான ஹொரணைப் பகுதியைச் சேர்ந்த பெண்ணின் சடலத்தை இலங்கைக்கு கொண்டுவர தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொது முகாமையாளர் மேலும் கூறினார். (2-6)

## பொன்சேகா கைதானதை கண்டித்து நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கண்ணீர்ப் புகை பிரயோகம்

ஜெனரல் சரத்பொன்சேகா கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து அனுராதபுரத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இருதரப்பினருக்குமிடையே ஏற்பட்ட முறுகலில் ஒருவர் காயமடைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மற்றுமொரு குழுவினர் கற்களை வீசித்தாக்கியுள்ளனர். இதனால் ஆத்திரமுற்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றைய குழுவினரைத் தாக்க முயற்சித்துள்ளனர்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த இரண்டு நாட்களாக தொடர் ஆர்ப்பாட்டம் நடைபெறறு வருகின்றமையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (2-6)

## எரிபொருள், மசகு உற்பத்திகளுக்கு தரநிர்ணயம் வழங்க நடவடிக்கை

எரிபொருள் மற்றும் மசகு எண்ணை சார்ந்த உற்பத்தி பொருட்களுக்கு தரநிர்ணயங்களை அறிமுகப்படுத்துவதற்கு மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

பெற்றோல் மற்றும் பெற்றோலிய வள அமைச்சு மற்றும் இலங்கைத் தர நிர்ணய சபை ஆகியவற்றுடன் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக ஆணைக் குழு தெரிவித்துள் ளது.

இதுவரை காலமும் மசகு எண்ணை மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்திகளுக்கான தரநிர்ணயங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இதன் காரணமாக இத்தகைய பொருட்களுக்குரிய தரம் பேணப்படாதிருந்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகவே மக்களை தெளிவூட்டுவதற்கான விசேட திட்டமொன்று அமுல் படுத்தப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் மக்களுக்கு உரிய வழிகாட்டல்களை வழங்க எண்ணியுள்ளதாகவும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (2-6)

**BRITISH COUNCIL**

இலங்கை பிரிட்டிஷ் கவுன்சில் பணியகத்தை யாழ்ப்பாணத்தில் செப்டெம்பர் 2010இல் திறப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய பகுதியில் குத்தகைக்கு கட்டட வசதிகள் கொண்ட இடங்கள் கிடைப்பதாயின் விரும்பத்தக்கது.

தமது பணிகளை மேற்கொள்வதற்காக தேவைப்படுபவை:-

**1. அலுவலக உபயோகத்திற்கு:**

50 அ$^2$ (540 சதுர அடிகள்) வரையிலான பரப்புடைய இரு அறைகள் உடன் பாவிக்கும் நிலையில் அல்லது திருத்தங்கள் மேற்கொள்ளும் வகையில் இருத்தல் வேண்டும்.

**2. பயிற்சி நிலையத்திற்கு:**

200 அ$^2$ (2200 சதுர அடிகள்) வரையிலான பரப்புடைய 6-7 அறைகள் உடன் பாவிக்கும் நிலையில் அல்லது திருத்தங்கள் மேற்கொள்ளும் வகையில் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக பெப்ரவரி 22-25 ஆம் திகதிகளில் இடங்களை பார்வையிடக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும்.

விபரங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

**யாழ். வணிகர் கழகம்,**

165,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**தொலைபேசி: 077 9097367**

(C-4435)

## நல்லூர்க் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

நல்லூர்க் கோட்ட வலயப் பாட சாலைகளுக்கிடையிலான வலைப் பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் எதிர்வ ரும் 18, 19 ,22 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் 18 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ள போட்டிகளில்,15 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்து எதிர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி மற்றும் யாழ். இந்து மகளிர் கல்லூரி எதிர் யாழ். முத்துத் தம்பி தமிழ் வித்தி மற்றும் கொக்குவில் இந்து எதிர் செங்குந்தா இந்துக் கல்லூரி ஆகிய பாட சாலை அணிகளும்

**17 வயதுப் பிரிவில்**

கொக்குவில் இந்து எதிர் அரி யாலை ஸ்ரீ பார்வதிவித்திமற்றும் யாழ்.இந்துமகளிர்கல்லூரி எதிர் யாழ். முத்துத் தம்பி தமிழ் மகா வித்தி மற்றும் யாழ். இந்து மகளிர் கல்லூரி எதிர் செங்குந்தா இந்து மற்றும் கொக்குவில் இந்து எதிர் கனகரட்ணம் மகாவித்தி ஆகிய பாட சாலை அணிகளும்

**19 வயதுப்பிரிவில்**

யாழ். இராமநாதன் கல்லூரி எதிர் கனகரட்ணம் மத்திய மகா வித்தி மற்றும் கொக்குவில் இந்து எதிர் முத்துத் தம்பி தமிழ் மகாவித்தி ஆகிய பாடசாலை அணிகளும் மோதவுள்ளன.

தொடர்ந்து19 ஆம்திகதி நடை பெறவுள்ள போட்டியில்

**15 வயதுப் பிரிவில்**

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி. எதிர் செங்குந்தா இந்துக் கல்லூரி யும்

**17 வயதுப்பிரிவில்**

செங்குந்தா இந்துக் கல்லூரி எதிர் முத்துத் தம்பி தமிழ் மகாவித்தி மற்றும் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி எதிர் கனகரட்ணம் மத்திய மகாவித்தி ஆகிய அணிகளும் மோதவுள்ளன.

மேலும் 22 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் சகல பிரிவு களிலும் வெற்றியீட்டிய அணிகள் மோதவுள்ளதாக நல்லூர் கோட் டக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (6-4)

# கே.கே.எஸ். வீதிக்கு மாற்று வழி பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்

22.01.2010 அன்று யாழ்ப்பாணத்தின் நான்கு A தர வீதிகளின் புனர் நிர்மாணப் பணிகள் சீன அரசின் பிரதிநிதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இப் புனருத்தாரண திட்டங்களுக்கு திட்டப் பணிப்பாளராக கடமையாற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப்பணிப்பாளர் மோசஸ் மரியதாசன் மற்றும் பிரதம பொறியியலாளர் அத்துடன் எல்லா அபிவிருத்தி திட்டங்களுக்கும் போசகரான அரசாங்க அதிபர் ஆகியோர் பத்திரிகைகளில் வெளியான செய்தியை கண்டதும் பேரதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கோவில்கள் இடிக்கப்பட்டே புனருத்தாரணம் நடைபெறப்போகின்றதென்ற எந்த ஒரு அறிவிப்பையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையோ அரசாங்கமோ அறிவிக்க வில்லை.

**வீதிகளில் பலவகை உண்டு**

A தர, B தர வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரியன. C தர, D தர வீதிகள் வீதி அபிவிருத்தி திணைக்களத் துக்கு உரியன. மற்றைய வீதிகள் மாநகரசபை, பிரதேசசபைகளுக்கு உரியன. அந்தந்த வீதிகளின் தரத்திற்கு ஏற்ப சட்டங்களும் உள்ளன.

அதாவது A தர வீதிகள் என்றால் வீதியின் மத்தியில் இருந்து 15 மீற்றர் (50 அடி) க்கு அப்பாலேயே கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கப்படும்.

B தர வீதி என்றால் இந்த அளவு 12 மீற்றர் [illegible]0 அடி) களும் C தர, D தர வீதிகளுக்கு இதிலும் குறைந்த பிரமாணங்களே எல்லைக்கோடாக கடைப்பிடிக்கப்படுகிறது. இவ் அறிவு சகல மக்களுக்கும், பிரதேச சபைகள் ஊடாக புகட்டப்பட்டுள்ளது.

எந்த வீதியாயினும் கட்டிடங்கள் கட்டுவதற்கு பிரதேசசபை ஊடாக அனுமதி பெறப்படவேண்டும். A தர, B தர வீதிகளாயின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சிபார்சு கட்டாயம் தேவையானதாகும்.

இவ்வாறாக வீடுகள், கடைகளை கட்டும் பொதுமக்கள் சரியான கட்டிட எல்லைக்கு அப்பாலேயே கட்ட அனுமதிக்கப்படுகிறார்கள்.

காங்கேசன்துறை வீதியை எடுத்துக் கொண்டால் பழைய கட்டிடங்கள் தவிர புதிய கட்டிடங்கள் அனைத்தும் 15 மீற்றருக்கு அப்பால் அமைந்திருப்பதை காணலாம்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்படாமல் கட்டப்படும் கட்டிடங்கள் அனைத்தும் சட்டவிரோத கட்டிடங்களாகும்.

இந்த வகையில் பொதுமக்கள் விழிப்புணர்வு ஊட்டப்பட்டு, சட்டங்களுக்கு ஏற்றால் போல் தங்களை தயார் படுத்திக் கொண்டுள்ளார்கள். அத்துடன் வீதி அபிவிருத்தி திட்டங்களை எதிர்கொள்ள தயாராகிவிட்டார்கள். ஆனால் பிரதேச சபை வீதிகளுக்கு மிகக் குறைந்த அளவே கட்டிட எல்லையாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க, கே.கே.எஸ். வீதி இருக்கின்ற வீதியை விடுத்து மாற்றுவழி ஊடாக அமைப்போமாயின், தற்போதைய சட்டதிட்டங்களை மிகப்பணிவோடு ஏற்று நடக்கும் பொது மக்கள் மிகவும் பாரதூரமான பாதிக்கப்படுவார்கள்.

அதாவது பிரதேச சபை வீதிகள் ஊடாக இதே கே.கே.எஸ். வீதியை மாற்றி அமைத்தோமேயாகில் பொதுமக்கள் மிகவும் பாரதூரமாக பாதிக்கப்படுவார்கள். ஏன் எனில் அவர்கள் பிரதேச சபையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப 33 அடி தூரத்தில் வீடுகளை கட்டியுள்ளார்கள்.

அதுமட்டுமல்லாது கே.கே.எஸ். வீதியில் எமது சட்டதிட்டங்களை மதித்து 50 அடி தூரத்தில் கடைகள், வீடுகளை கட்டி உள்ள மக்கள் வீதி அபிவிருத்தியை ஆவலோடு எதிர் பார்த்திருக்க இல்லாத ஒன்றை பெரிய பிரளய மாக்குவது மிகவும் வேதனைக்குரியதாகும்.

மேலும் தற்போது யாழ்.-பருத்தித்துறை வீதியில் 15 ஆவது கி.மீ. இலிருந்து 21 ஆவது கி.மீ. வரை வீதி அகலமாக்கப்பட்டு புனர் நிர்மாணம் மேற்கொள்ளப்படுகிறது. இப்புனர் நிர்மாண வேலைகளில்,

(1) 6.2 மீற்றர் அகலமான பகுதி வாகனங்கள் ஓடும்தார் பகுதியாகும்.
(2) அடுத்த 1.4 மீற்றர் இரு மருங்கும் துவிச்சக்கர வண்டிகள் பாவிப்பதற்கு உரிய தார் பகுதியாகும்.
(3) மிகுதி 1 மீற்றர் இரு மருங்கும் மண்ணினால் ஆன புயங்களாகும்.
(4) வாய்க்கால் 0.5 மீற்றர் தூரம்.

ஆக மொத்தம் வேலிகளுக்கு இடைப்பட்ட தூரம் 12 மீற்றர் இருந்தாலே தாராளமாக விபத்துக்கள் இன்றி பயணிக்க முடியும். இந்த வகையில் கோப்பாய் வாழ் பொதுமக்கள் தங்கள் வேலிகளை நகர்த்தி 14 மீற்றர் அகலப் பாதைக்கு இடம் தந்துள்ளார்கள். இந்த வகையில் கோப்பாய் வாழ் மக்களுக்கு எமது நன்றிகளை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். இப் பகுதிக்குள் அமைந்துள்ள அனைத்து மத வழிபாட்டு ஸ்தலங்களும், அரசாங்க அலுவலகங்களும், பாடசாலைகளும் பூரண ஒத்துழைப்பை தந்துள்ளன.

அவர்கள் தங்கள் வேலிகளை நகர்த்தி தற்போது 50 வீதமான வேலைகள் முடிபுற்ற தருவாயில் கூட எந்த அபிப்பிராயமும் தெரிவிக்காத புத்திஜீவிகள், காங்கேசன்துறை வீதியில் கோவில்கள் என நொண்டி காரணம் கூறி மக்களை தவறான வழி நடத்தும் நோக்கங்கள் யாது?

கே.கே.எஸ். வீதியில் இரு கோவில்கள் மட்டுமே வீதிக்கு அருகே உள்ளன. பத்திரிகைகள், புத்திஜீவிகள் சரியானதை சரியான முறையில் மக்களுக்கு எப்போதும் போதிக்க வேண்டும்.

தற்போது காலையில் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர், பிள்ளைகள் வீடு திரும்பி வரும்வரை ஏக்கத்தில் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இதற்கு ஒடுங் கிய வீதிகளில், கொழும்பில் இருந்து யாழ். வரும் வாகனங்களின் எண்ணிக்கையும் அவற்றினுடைய அதிகூடிய வேகமுமே காரணமாகும்.

முதற் கோணல் முற்றும் கோணல் என்ற யதார்த்தத்தை புரிந்து கொண்டு, மனம் இருந்தால் இடம் உண்டு என்ற முதுமொழிக் இணங்க கோப்பாய் வாழ் மக்களை முன்னுதாரணமாக எடுத்து எல்லோரும் சகல வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கும் ஒத்துழைப் போமாக.

**பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.**

# யாழ்ப்பாணத்தில் சிறந்த அணிகள் தரவரிசையில் யாழ்.பல்கலைக்கழக கிரிக்கெட் அணி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிறந்த கிரிக்கெட் அணிகள் தரவரிசையில் யாழ். பல்கலைக்கழக அணி 10 புள்ளிகளைப்பெற்ற முதலிடத்திலுள்ளதாக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நேற்று அறிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கு 2010 ஆம் ஆண்டு முதல் புள்ளிகள் அடிப்படையில் தரைவரிசைப்படுத்தவுள்ளோம்.

இதனடிப்படையில் கடந்தவாரம் நடந்த விக்ரம்-ராஜன்-கங்கு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான 30 ஓவர்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி, யாழ். ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணி, கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழக அணி, யாழ். சென்றலைட் விளையாட்டுக்கழகம் ஆகிய அணிகள் பங்கேற்றன.

இத் தொடரில் யாழ். பல்கலைக்கழக அணி விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதில் யாழ். பல்கலைக்கழக அணி முதல் சுற்றில் யாழ். சென்றலைட் விளையாட்டுக் கழக அணியையும் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழக அணியையும் வென்று 6 புள்ளிகளைப் பெற்றது.

அத்துடன் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணியும் யாழ். சென்றலைட் கிரிக்கெட் அணியும் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் யாழ். பல்கலைக்கழக அணியையும் வென்று 9 புள்ளிகளைப்பெற்றது.

கொக்குவில் கே.சி.சி.சி. அணி, யாழ். சென்றலைட் விளையாட்டுக்கழக அணியை வென்று 3 புள்ளிகளை பெற்றுக் கொண்டது.

இத்தொடரில் முதல் சுற்று 3 போட்டிகளிலும் தோல்வியடைந்த யாழ். சென்றலைட் அணி புள்ளிகள் எதனையும் பெறவில்லை.

இத் தொடரின் இறுதிப் போட்டியில் (40 ஓவர்கள் போட்டி) யாழ். பல்கலைக்கழக அணி சம்பியனாகி 4 புள்ளிகளைப் பெற்று தொடரில் மொத்தம் 10 புள்ளிகளைப்பெற்று முன்னிலையைப் பெற்றது.

இதன் மூலம் 2010ஆம் ஆண்டு முதலாவது கிரிக்கெட் தொடரின் முடிபில் யாழ். பல்கலைக்கழக அணி 10 புள்ளிகளைப் பெற்று சிறந்த அணிகள் தரவரிசையில் முதலிடத்திலும் யாழ். ஜொலிஸ்ரார்ஸ் அணி 9 புள்ளிகளுடன் 2 ஆம் இடத்திலும் கொக்குவில் கே.சி.சி.சி. 3 புள்ளிகளுடன் 3 ஆம் இடத்திலும் உள்ளன.

## இங்.வீரர்களுக்கு சிக்கல்

இரண்டாவது சம்பியன் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணிகள் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் இத் தொடர் நடக்கும் சமயத்தில் இங்கிலாந்தில் உள்ளூர் போட்டிகள் நடக்கவுள்ளன.

உலகின் முன்னணி இருபது-20 அணிகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர், கடந்த ஆண்டு முதல் முறையாக இந்தியாவில் நடந்தது. இரண்டாவது தொடர் வரும் செப்ரெம்பர் 10 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை இந்தியாவில் நடக்கும் என ஐ.பி. எல். தலைவர் லலித் மோடி அறிவித்துள்ளார்.

ஆனால் இதே சமயத்தில் இங்கிலாந்து உள்ளூர் சம்பியன்ஸ்சிப் போட்டிகள், 40 ஓவர் கிரிக்கெட் தொடர் மற்றும் இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே ஒரு நாள் தொடர் ஆகியவை நடக்கவுள்ளன.

## 2020ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் கிரிக்கெட் போட்டி நடத்த அனுமதி?

(வான்கூவர்)

1900ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் இடம் பெற்றிருந்தது. அப்போது 2 நாள் போட்டியாக இதை நடத்தினார்கள். இதில் இங்கிலாந்து பிரான்ஸை தோற்கடித்து பதக்கம் பெற்றது. அதன் பின்னர் கிரிக்கெட் போட்டியை ஒலிம்பிக்கிலிருந்து நீக்கிவிட்டனர். அப்போது டெஸ்ட் போட்டி மட்டுமே இருந்தது. இதை அதிக நாளாக விளையாட வேண்டும் என்பதால் ஒலிம்பிக்கில் சேர்த்துக்கொள்ள வில்லை.

அதன் பின்னர் 50 ஓவர் கொண்ட ஒரு நாள் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது 20 ஓவர் போட்டியும் வந்துவிட்டது. எனவே கிரிக்கெட்டையும் ஒலிம்பிக் போட்டியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை, ஒலிம்பிக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்தது.

இதை ஒலிம்பிக் சங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஒலிம்பிக்கில் ஒரு போட்டியாக சேர்க்க

### வாக்கெடுப்பு நடத்த முடிபு

வேண்டும் என்றால் ஒலிம்பிக் குழுவில் வாக்கெடுப்பு நடத்தியே சேர்க்க முடியும். எனவே கிரிக்கெட்டையும் வாக்கெடுப்பில் பங்கேற்க வைக்க ஒலிம்பிக் கமிட்டி முடிபு செய்துள்ளது.

புதிதாக ஒரு போட்டியை ஒலிம்பிக்கில் சேர்க்க 7 ஆண்டுகளுக்கு முன்பே ஒலிம்பிக் சங்கம் வாக்கெடுப்பு நடத்தி முடிபு எடுக்க வேண்டும்என்று விதியுள்ளது. 2016ஆம்ஆண்டு நடக்கும் போட்டிகளில் இடம் பெற வேண்டிய போட்டிகள் குறித்து கடந்த ஆண்டே முடிபு எடுக்கப்பட்டுவிட்டது. எனவேகிரிக்கெட்டை 2020 ஆம் ஆண்டுதான் ஒலிம்பிக்கில் சேர்க்க முடியும் அதற்கான வாக்கெடுப்பு 2013 இல் நடைபெறும் அதில் கிரிக்கெட்டையும் வாக்கெடுப்பில் சேர்த்து விடுவது என்று ஒலிம்பிக் குழு முடிபு செய்துள்ளது. அதில் கிரிக்கெட்டுக்கு ஆதரவு கிடைத்தால் 2020 ஒலிபிக்கில் கிரிக்கெட் இடம் பெறும்.

## தோனியின் புதிய அவதாரம்




(மும்பை)

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் தோனியும், பாலிவுட் நடிகை பிரித்தி ஜிந்தாவும் இணைந்து, விளம்பரப் படம் ஒன்றில் நடித்துள்ளனர். அடுத்த மாதம் மூன்றாவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அணியின் தலைவராக இருக்கும் தோனி ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர்கிங்ஸ் அணியின் தலைவராகவும் உள்ளார். பிரித்தி ஜிந்தாவை பொறுத்தவரை கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் உரிமையாளர்களில் ஒருவராக உள்ளார். வெவ்வேறு அணி களை சேர்ந்த இவர்கள் பகைமை மறந்து விளம்பர படத்துக்காக இணைந்துள்ளனர்.

**பொருத்தமான ஜோடி**

தனியார் சமையல் எண்ணெய் ஒன்றின் விளம்பரத்துக்காக இணைந்த இந்த ஜோடியின் கெமிஸ்ட்ரி பொருத்தமாக இருந்ததாம். இதில் கிளாடியேட்டர் உடையில் புதிய அவதாரம் எடுத்துள்ளார் தோனி. பிரித்தி ஜிந்தா, சில்வர் நிறத்திலான உடையில் சுப்பர் வுமன் போல் காணப்பட்டார்கள். இருவரும் சேர்ந்து இருப்பது போன்று பல படங்கள் எடுக்கப்பட்டன.

இவர்களை இயக்கிய அனுபவம் குறித்து டப்பூ ரட்னானி கூறுகையில்,

பிரித்தி ஜிந்தாவுடன் இணைந்து இதற்கு முன் பல படங்களில் பணியாற்றியுள்ளேன். மிகுந்த அழகான அவர், முழு உற்சாகத்துடன் நடித்தார். தோனியுடன் பணியாற்றுவது இரண்டு அல்லது மூன்றாவது முறையாக இருக்கும் என நினைக்கிறேன். எப்போதும் அமைதியாக காணப்படும் தோனி இதில் நடிப்பதற்கு மிகுந்த ஆர்வத்துடன் இருந்தார்.

விளம்பர படத்தில் ஒன்றிப்போன அவர் நூறு சதவீத உற்சாகத்துடன் கமரா முன்பு நடித்தார். இவர்களது படத்தை விளம்பர போஸ்டரில் பயன்படுத்த உள்ளோம் என்றார்.

## எதிர்க்கட்சிகள்...

ருடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனத் தமிழ், முஸ்லிம் கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் நேற்று முன்தினம் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு, எதிர்வரும் பொதுத் தேர்தலில் யானைச் சின்னத்திலேயே போட்டியிடுவது எனத் தீர்மானித்தது.

இந் நிலையில் எதிர்க்கட்சித் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏனைய சில கட்சிகளிடையே முரண்பாடு எழுந்துள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்ணணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளதாவது, எந்தச்சின்னத்தில்போட்டியிடுவது என்பது தொடர்பில் எமக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை.

ஆனால் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடிய பின்னர் அறிவிக்கலாம் என முடிபு செய்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறான தீர்மானத்திற்கு வந்திருக்கின்றது. இது பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

யானைச் சின்னத்தில் போட்டியிடுவது குறித்துப் பிரச்சினையில்லை. ஆனால் எமக்கு ஆதரவு வழங்கும் பிரதான கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கலாம் என்றார். (ந-5)

# அமைச்சர் லியன் பொக்ஸ் இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

பிரித்தானியப் பாதுகாப்பு நிழல் அமைச்சரும் மகிந்தவின் நண்பருமான லியன் பொக்ஸ் நாளை இலங்கை வருகின்றார்.

இவரது பயணத்தின் முக்கிய நோக்கம் மகிந்த மற்றும் சரத் பொன்சேகா ஆகியோருக்கிடையே சமரசம் பேசி பொன்சேகாவை ஒருவாறு மீட்பதேயாகும் எனக் கூறப்படுகின்றது.

லியன் பொக்ஸ் அவர்களை இலங்கை மீதான மேற்கத்தைய நாடுகளின் இறுக்கத்தைத் தளர்த்த உதவும்படியும், அபிவிருத்திக்கு உதவும் படியும் கேட்பதற்காக மகிந்த அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்துள்ள லியன் பொக்ஸ் தான் வருவதென்றால் சரத் பொன்சேகா விடயத்தில் தளர்வுப் போக்கினைக் காட்ட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதனடிப்படையிலேயே இன்று லியன் பொக்ஸ் இலங்கை வருவதாகப் பிரித்தானியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-5)

## இலங்கையில் நடந்த போர்...

அந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய நவநீதம்பிள்ளை, இலங்கை விவகாரம் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரை அங்கு போர்க் குற்றங்கள் நடந்திருக்கின்றன என்றுதான் சந்தேகிப்பதாகவும் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை வேண்டும் என்றும் அது சுதந்திரமாகவும் நம்பகத் தன்மையுடனும் அமைய வேண்டும் என்றும் தான் வலியுறுத்தி வருவதாகவும் நவநீதம்பிள்ளை கூறினார்.

இவ் விவகாரம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் அமைச்சர், தனது அரசாங்கத்திடம் பேச வேண்டும் என்று தான் வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாகப் போரின்போதும் அதற்குப் பின்னரான காலகட்டத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்து மட்டுமல்லாமல் தேர்தலுக்குப் பின்னர் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்தும் அவர் அரசாங்கத்திடம் பேச வேண்டும் என்று இலங்கை அமைச்சரிடம் தாம் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைகள் அவையில் இந்த விவகாரம் கையாளப்பட்ட விதம் குறித்து தமது அதிருப்தியை ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளிப்படுத்தியுள்ளார். (ந-5)

## கருணா அரச விடுதியில்...

மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.

பல்வேறு சுலோகங்களுடன் கூடிய அட்டைகளைத் தாங்கிய வண்ணம் அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். முன்னாள் தேசிய வீரர் இப்போது துரோகியா? கருணா அரச விடுதியில் ஜெனரலோ சிறையில், ஜெனரலே நாங்கள் உங்களோடுதான் போன்ற சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அமைப்புக்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் ஹொரண அமைப்பாளர் ரவி ஜெயவர்த்தன, பேராசிரியர் விமல் குணவர்த்தன, பி.டி.அபேவர்த்தன ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஜெனரல் பொன்சேகாவை கைது செய்தவர்களுக்கு இடி விழட்டும் எனக் கூறி பொதுமக்கள் தேங்காய்களை உடைத்துள்ளனர்.

இதேவேளை அநுராதபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை இனந்தெரியாதவர்கள் தாக்கிக் கலைக்க முற்பட்டுள்ளனர். (ந-5)

## நாட்டு...

தெவுந்த ஞானிஸ்ஸ தேரர் உள்ளிட்ட முக்கிய பௌத்த பிக்குகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் பார்த்துக் கொண்டு அமைதி பேணுவது பௌத்த பிக்குகளின் கடமையல்ல என பௌத்த பிக்குகள் குறிப்பிட்டுள்ளனர். (ந-5)

## ஜனாதிபதி மகிந்தவைச் சந்தித்து...

அத்தநாயக்க தெரிவித்துள்ளதாவது,

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பொன்சேகாவின் விடுதலை குறித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

பொன்சேகாவைச் சந்திப்பதற்கு அவரின் மனைவியைத் தவிர யாருக்கும் அனுமதிகள் வழங்கப்படவில்லை. எனவே தனக்கு அவரைப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என இந்தச் சந்திப்பின் போது ரணில் கோரிக்கை விடுத்திருந்தார்.

பொன்சேகாவின் கைது சட்டவிரோதமானது எனத் தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, சரத் பொன்சேகா குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டால் விடுதலை செய்யப்படுவார் எனத் தெரிவித்தார்.

இதனிடையே முன்னாள் இராணுவத் தளபதியைத் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைப்பதற்கான சட்டங்கள் இராணுவச் சட்டங்களிலும் ஏனைய விதிகளிலும் இல்லை என ரணில் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல, தேசிய ஊடக மையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் குலுகல்ல, இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க ஆகியோர் ஒருவருக்கு ஒருவர் முரண்பாடான குற்றச்சாட்டுக்களைப் பொன்சேகா மீது தெரிவித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## ஜே.வி.பியினர் கைதாவதை...

யாடப்பட்டதாகத் தெரிகின்றது.

சில அரசாங்க அமைச்சர்கள், ஜே.வி.பியின் முக்கியமான உறுப்பினர்கள் சிலர் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என வெளிப்படையாகவே தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ள நிலைமையைப் பார்க்கும் போது ஜே.வி.பியின் சில உறுப்பினர்களை அரசாங்கம் கைது செய்ய முயன்றால் அது ஒன்றும் ஆச்சரியமாக இருக்கப் போவதில்லை என்று கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் முக்கியஸ்தர்கள் கைது செய்யப்படுவதற்கான நிலைமை வலுவடையுமானால் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு அறிவிப்பது பற்றி கட்சி ஆலோசித்து வருகின்றது.

எங்களுடைய பாதுகாப்புக்காக நாம் சர்வதேசத்திடம் முறையிட வேண்டி வரலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## நாடாளுமன்றத் தேர்தலில்...

இந்த அடிப்படை மீறல் மனுவை விசாரித்த நீதியரசர்கள் அடங்கிய குழு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சரத் பொன்சேகாவுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான அனுமதி உட்பட சில மேலதிக உரிமைகளை வழங்கவும் அரசுக்கு உத்தரவிட்டது.

இந்த மனு மீதான விசாரணையை பிரதம நீதியரசர் அசோக என். டி.சில்வா மற்றும் நீதியரசர்கள் சிராணி திலகவர்த்தன, சுந்தர எக்க நாயக்க தலைமையிலான நீதியரசர்கள் குழு விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

மனுவை விசாரணை செய்த நீதியரசர்கள் குழு தடுத்து வைக்கப்பட்டுள்ள பொன்சேகாவுக்கு மேலதிகமான சில உரிமைகளை வழங்குமாறு உத்தரவிட்டது.

நீதிமன்ற உத்தரவுக்கமைய பொன்சோவின் சட்டத்தரணிகள் மற்றும் குடும்பத்தினர் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொன்சேகாவை அடிக்கடி சென்று பார்வையிடுவதற்கும் அனுமதியை வழங்குமாறு அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் தற்போது பொன்சேகா தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றப்படக் கூடாது என்றும் நீதிமன்றம் கண்டிப்பான உத்தரவை அரசுக்கு வழங்கியுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 23 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தால் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மனுவைத் தள்ளுபடி செய்யுமாறு அரச தரப்புச் சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார்.

எனினும் இக் கோரிக்கையை உயர் நீதிமன்றம் நிராகரித்தது. அரச தரப்பினால், கைது செய்யப்பட்டவரின் மனைவி மனுவைத் தாக்கல்செய்ய முடியாது என்றும் அவரின் சட்டத்தரணியே மனுவைத் தாக்கல் செய்யலாம்.

அத்துடன் அச் சட்டத்தரணி சத்தியப்பிரமாண ஆவணம் ஒன்றை சமர்ப்பிக்காததால் அவரும் தாக்கல் செய்ய முடியாது என்பதுடன் அது சட்டத்திற்கு முரணானது என்றும் அரச தரப்புச் சட்டத்தரணி சஞ்ஜய் இராஜரட்ணம் வாதிட்டார். எனினும் இதனை நீதியரசர்கள் குழு நிராகரித்தது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொன்சேகா போட்டியிட விரும்பினால் வேட்புமனுவில் கையொப்பம் இடவும் ஏனைய ஆவணங்களைத் தயாரிக்கவும் இடமளிக்குமாறு உயர் நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டது.

இந்த உத்தரவு குறித்து கருத்து வெளியிட்ட பொன்சேகாவின் சட்டத்தரணி சிரான் திலக, நீதியரசர்களின் இவ் உத்தரவு பொன்சேகாவை இராணுவ நீதிமன்றில் நிறுத்தி விசாரணை செய்வதைத் தடுக்கும் என்றும் இது பொன்சேகாவுக்குக் கிடைத்த வெற்றி என்றும் கூறினார். (ந-5)


**பாராட்டுதலும் நன்றியும்**

போரினால் பாதிக்கப்பட்ட எமது தனியார் பேருந்து உரிமையாளர் கழகத்தின் உரிமையாளர்கள், ஒட்டுநர்களின் நன்மையினைக் கருத்திற் கொண்டு நாம் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக எமது ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கு விடுப்பு நாள் என்றும் பாராது எமது ஓட்டுநர்களிற்கான நேர்முகத் தேர்வுக்கு ஒழுங்குபடுத்தியும், சமுகந்தந்தும் உதவி புரிந்த **மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் திரு. பத்மநாதன்** அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இப்படிக்கு
தனியார் பேருந்து
உரிமையாளர் கழகம், கிளிநொச்சி.

(C-4438)



யாழ் மாணவர்களின் நலன் கருதி

**STUDY IN ABROAD**

**வெளிநாட்டில் கல்வி**

**GREENWICH BUSINESS SCHOOL (GBS)**

ஊடாக

லண்டனில் உள்ள
10 கல்லூரிகளுக்கான

இலவச கருத்தரங்கு

**SPOT ADMISSION**
உடனடி அனுமதி

இடம்: யா.ப.நோ.கூ. சங்க கேட்போர் கூடம்
காலம்: நாளை (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை மட்டும்.
நேரம்: மு.ப. 10.00- பி.ப. 2.00 மணிவரை

தொடர்புக்கு:- 077 - 3537378

(418)


## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு குலசிங்கநாதன்

6ஆம் வட்டாரம் மண்டைதீவை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு குலசிங்கநாதன் 12.02.2010 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு செல்லம்மா தம்பதியின் பாசமிகு புதல்வனும் சிறிகண்டதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா, செங்கமலம் ஆகியோரின் மருமகனும் விஜயலதா, சிறிமயூரன், முகுந்தன், விஜிதா, வித்தியகலா, பிரதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும்.

செல்லக்குமார், இளம்துளசி, சிறிரஞ்சன், சுவேதன், தயாதரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கேதாரன், சாமந்தி, ஆருரன், ஆரதி, தணிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும், புஸ்பராகம், தவமணிதேவி, நேசரட்ணம், நாகலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.02.2010 ஞாயிற்றுக் கிழமை அன்று பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈமக்கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கனத்தை இந்து மயானத்துக்கு பிற்பகல் 4.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
திருமதி ச.யாதவகுலசிங்கம்

(இ)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.